# செந்தமிழ்

தொகுதி : 94 செப்டம்பர் 2000 பகுதி : 9

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு.எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

# செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர். | நா. பாலுசாமி (ஆசிரியர்) |
| பேரறிஞர். | தமிழண்ணல் |
| பேரறிஞர். | செ.கந்தசாமி |
| டாக்டர். | என். சேதுராமன் |
| பேரறிஞர். | ம.ரா.போ. குருசாமி |
| பேரறிஞர். | சி.கதிர் மகாதேவன் |
| பேரறிஞர். | கு. துரைராசு |
| பேரறிஞர். | அ.அ. மணவாளன் |
| பெரும் புலவர். | இரா. இளங்குமரன் |
| பேரறிஞர். | அ. தட்சிணா மூர்த்தி |
| பேரறிஞர். | எஸ்.எம். கமால் |
| பேரறிஞர். | ஈ. கி. இராமசாமி |
| பேராசிரியர். | சே. அரிராமநாதன் |
| பேரறிஞர். | அ.மா. பரிமணம் |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 1000 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# பொருளடக்கம்

1. சங்கப் பனுவலுள் வரலாற்றுவமைகள் ............... 305
பேரறிஞர் அ.மா. பரிமணம்

2. ஊழல் இல்லாத சமுதாயத்தை
உருவாக்க இயலுமா ? ............................................ 321
அறிஞர் க.சி. அகமுடைநம்பி

3. திருவள்ளுவரும் அரசுநெறி
இயக்கக் கோட்பாடுகளும் ...................................... 332
பேரறிஞர் பா. சூரியநாராயணன்

4. எல்லோருக்கும் தொல்காப்பியம்............................ 336
பேரறிஞர். நா. பாலுசாமி

5. நூல் மதிப்புரை ..................................................... 339

# சங்கப் பனுவலுள் வரலாற்றுவமைகள்

-பேரறிஞர் அ.மா. பரிமணம்

சங்க நூல்களாகிய எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும், சங்ககாலத் தமிழ் மக்களின் நாகரிகம், பண்பாடு முதலியவற்றைக் காத்து விளங்கும் கருவூலங்களாகும் என்பதனை இன்று மேலை நாட்டு ஆய்வாளரும் தயங்காது ஏற்க முற்பட்டுள்ளனர். பழந் தமிழகம், 'வடவேங்கடம் தென்குமரி, ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்' எனப் பேசப்பட்டாலும், வேங்கடத்திற்கு அப்பால் விளங்கிய நாட்டுப் பகுதிகளோடும், கடல் கடந்து விளங்கிய சில வேற்று நாடுகளோடும் வணிகம் போன்ற வகையில் தொடர்பு கொண்டிருந்ததனை அவ்விலக்கியங்கள் உணர்த்துகின்றன. வேற்று மொழிகள் வழங்கும் பிற நாட்டு மக்களொடு தொடர்பு கொண்டிருந்த மொழியாகத் தமிழ்மொழி இருந்துள்ளது. வேற்றுமொழியாளரான யவனர், மிலேச்சர், காழகத்தார் போன்றார் தமிழகம் போந்து வணிகம் புரிந்தும், பணிகள் புரிந்தும் இருக்குமளவு, தமிழ்மொழி வளம் செறிந்ததாக இருந்து வந்துள்ளது. எத்தகைய கருத்துக்களையும் உணர்த்தவும் உணர்ந்துகொள்ளவும் தேவையான மொழிச் செம்மை பெற்றுத் தமிழ் விளங்கியது.

ஒருவர் தம் உள்ளத்தெழும் கருத்துக்களைத் தம் மொழியால் பிறருக்கு உணர்த்த மேற்கொள்ளும் உத்திகளுள் சிறந்தது ஒப்புமைப்படுத்திக் கூறுவதாகும். இஃது எல்லா மொழியினர்க்கும் இயல்பாக உரியதொன்றாகும். உள நூலாரும், தெரிந்தனைக் கொண்டு தெரியாததனை விளக்குதல் வேண்டும் (from known to unknown) என்பர். இந்த உத்தி, பொது மக்கள் புலமக்கள் - கற்றவர் கல்லாதவர் - சிறுவர் முதியவர் என்னும் வேறுபாடின்றிப் பேச்சுவழக்கில் மேற்கொள்ளப் பெற்று வருவதனை அனைவரும் அறிவர். செய்யுள் இயற்றும் புலவர்களுக்காயின், இது கலையழகு மிக்கதும் இன்றியமையாததுமான ஒன்றாகும். எம்மொழிப் பேச்சுவழக்கிலும், அன்றாட வாழ்வில் அனைவராலும் எளிதாகப் பின்பற்றப்படும் இது, செய்யுளில் இடம்பெறும்போது, கண்டு விதிக்கப்படும் இலக்கண விதிகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்படும்.

உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றாகக் கருதப்படும் தமிழில், இதுகாறும் கிடைத்துள்ள நூல்களுள் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம். இன்று கிடைக்காமல் மறைந்துபோன பல தமிழ்

இலக்கிய-இலக்கண நூல்களிலிருந்து உருவாக்கப்பட்ட இத்தொல்காப்பியம் ஒரு இலக்கண நூலாக அமைந்திருப்பதும், மொழி பற்றி அது கூறும் இலக்கணங்கள் இன்றைய மொழியியல் வல்லுநர்களும் ஏற்கும் வகையில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கன. வடமொழி உட்பட, உலகத்துப் பிறமொழி இலக்கண நூல்கள் அவ்வம் மொழிகளின் எழுத்து, சொல் ஆகியவற்றுக்கு மட்டுமே இலக்கணம் கூறத் தொல்காப்பியம் மட்டுமே தமிழ் மொழி பேசிய மக்களின் வாழ்வியல் இலக்கணத்தினைப் 'பொருளதிகாரம்' என்னும் பகுதியில் காட்டுவதாக அமைந்துள்ளமை இதன் தனிச் சிறப்பாகும். பழந்தமிழ் மக்களின் பேச்சுவழக்கு, செய்யுள் வழக்கு ஆகியவற்றை ஆராய்ந்து தமிழ்மொழி இலக்கணமும் வாழ்விலக்கினமும் இந்நூல் கூறுகின்றது என்பதனை, இதன் பாயிரம், ''தமிழ்கூறு நல்லுலகத்து, வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் ... நாடி ... முந்நூல் கண்டு, முறைப்பட எண்ணி''ச் செய்யப்பட்டது எனக் கூறுகின்றது.

தொல்காப்பியர், தாம் திட்டமிட்டு வரையறுத்துக் கொண்டவாறு (முறைப்பட எண்ணி), எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையும் தனித்தனி ஒன்பது இயல்களாகச் செய்துள்ளார். பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களுள் தொடக்கத்தில் இடம் பெற்றுள்ள அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள் ஆகிய ஐந்து இயல்களும், வாழ்க்கை இயல்புகள் பற்றியும், அடுத்துவரும் மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபு ஆகிய நான்கு இயல்களும் வாழ்க்கையைப் பேச்சு, செய்யுள் ஆகிய இருவகைகளில் வெளிப்படுத்திக் காட்டும் பாங்கு பற்றியும் கூறுவனவாக உள்ளன. பொருளதிகாரத்தை ஆராய்வோர் இவ்வுண்மையினை நன்குணர்வர். செய்யுட்கண் இடம் பெறுவது தானே இதில் கூறப்படும் உவமை. அதனைத் தனி இயலாகக் கூறுவது ஏன்? என வினவலாம். வடமொழி போன்றவற்றில் உவமை உள்ளிட்ட அணிகள் அலங்காரம் என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுச் செய்யுள் இலக்கணத்தின் வேறாகக் கூறப்பட்டுள்ளது. தமிழிலும் பிற்காலத்தில் அணிகளைத் தொகுத்துக் கூறும் சில தலைநூல்கள் (தண்டியலங்காரம், மாறனலங்காரம் போல்வன) தோன்றலாயின. அவை பெரும்பாலும் அமைப்பில் வடமொழிச் சார்புடையனவாக அமைந்தன. ஆங்கு அவை உடலில் (பிறிதின் கிழமையாக) அணியப்படும் அணிகலன்களைப் போலக் கருதப்பட்டன. அதனால், செய்யுள் இயற்றுவோர் கற்பனைக்கேற்ப அலங்காரங்கள் 35- என 100- என, அவற்றினும் மிக்கனவாகப் பெருக்கிக்கூறும் நிலை ஏற்பட்டது. தொல்காப்பியர் கருத்தில், உவமம் செய்யுளில், உடலின் இயற்கை அணி (அழகு) போல

(தற்கிழமையாக) அமைந்த ஒன்றாகும். அதனால், அவர் உவமை ஒன்று மட்டுமே அணியெனக் கொண்டு அதனை ஓரியலாக விதந்தோதுவாராயினர். பிறர், பெருக்கிக் கூறும் அலங்காரங்கள் பலவும், உவமத்துக் கண் அடங்கும் என்பதனை உணரலாம். இவ்வுண்மையினைப் பிற்காலத்தே தோன்றிய அப்பைய தீட்சிதரவர்கள், தமது 'சித்திர மீமாம்சை' என்னும் நூலில்,

*"உவமை என்னும் தவலருங் கூத்தி*
*பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து*
*காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி*
*யாப்பறி புலவர் இதயம்*
*நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே"*

என்று விளக்கியுள்ளார். தொல்காப்பியர், உவமம் செய்யுட்கு மட்டுமே யன்றிப் பேச்சு வழக்கிற்கும் உரியதாகலின் அதனைச் செய்யுளியலுக்கு முன்னர் அமைத்துள்ளார்.

சங்கப் பாடல்களில் வரலாற்றுவமை பற்றிக் காணுமுன்னர் உவமம் பற்றிய சில செய்திகளை நினைவு கூர்வது ஏற்புடையதாகும். 'உவமம் என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளின் ஒப்புமை கூறுதல் என்பர் (பேரா. தொல்.உவமம்.1.). ஓர் உவமைக் கூற்றில் உவமம் (உவமானம்), உவம உருபு, பொதுத் தன்மை, பொருள் (உவமேயம்) என நான்கு உறுப்புக்கள் அடையும். 'பவளம் போலச் சிவந்த வாய்' என்னும் தொடரில் இந்நான்கு உறுப்புக்களும் முறையாக அமைந்துள்ளதனைக் காணலாம். இக்கூற்று, பொதுத் தன்மை குறைந்தும் அதனோடு உவம உருபு குறைந்தும் நின்று, தொகைத்தன்மை எய்திப் 'பவளவாய்' என்றும் நிற்றல் கூடும். பவளத்திலும் வாயிலும் அமைந்து காணப்படும் செந்நிறமே ஈண்டு பொதுத்தன்மையாகும். அந்த அளவிலேயே ஒப்புமை காணப்பெறும். உவமம், ஒன்றின் தொழில் (வினை), பயன், வடிவு, வண்ணம் ஆகிய நான்கு வகையாக அமையும்; இதற்கு மேலும், உவமம் பற்றிய செய்திகளைத் தொல்காப்பிய உவம இயல், அதன் உரை ஆகியவற்றால் உணரலாம்.

உருவகம் போலும் சில அணிகள் சங்கப் பாடல்களில், சிற்சில விடங்களில் காணப்படினும், உவமமே மிகப்பல இடங்களில், அமைந்துள்ளன. 'வறியவன் இளமை போல் வாடியசினை' (கலி, 10.1), 'மலை இமைப்பது போல் மின்னி' (நற்.112.8), என்றிங்ஙனம் ஓரடியாகவும் 'நிலவடைந்த இருள்போல, வலை உணங்கு மணல் முன்றில்' (பட்டினம்.82,83), 'புலிசேர்ந்து போகிய கல்லளைபோல, ஈன்ற

வயிறோ இதுவே' (புறம் 86. 5,6) என்றிங்ஙனம் ஈரடியாகவும், இரண்டின் மிக்க பல அடிகளாகவும் உவமைகள் அமைந்தாலும் அவற்றின் பொருள் விளக்கும் பாங்கில் சிறிதும் குறையுடைனவாகா. கல்பொருசிறு நுரையார் (குறு.290), தேய்புரிப் பழங்கயிற்றினார் (நற்.284), செம்புலப்பெயல்நீரார் (குறு.40), என்றிங்ஙனம் புலவர்கள் உவமையால் பெயர் குறிப்பிடப்படுமளவு சங்ககால உவமைகள் சிறந்து விளங்குகின்றன. சங்கப்புலவர்களுட் சிலர் வரலாற்று நாட்டமுடையவர்களாய்த் தங்கள் செய்யுட்களில் அரிய வரலாற்றுக் குறிப்புக்களை உவமைகள் வாயிலாக வழங்கியுள்ளனர்.

திணை அமைப்பில் செய்யுள் இயற்றும் மரபு நிலவிய சங்க காலத்தில், ஓர் அரசனை - தலைவனைப் பாடாண் டிணையின் எத்துறையுள் பாடுவதாயினும் அவனுடைய ஒழுகலாறுகளை - உயர் பண்புகளை - மட்டுமே பாடமுடியும். அவனிடம் யாதேனும் குறைகண்டால், அதனைக் கண்டித்துக் கூறாமல், வேண்டுகோளாகவோ அறிவுரையாகவோ உணர்த்திச் சரி செய்யப் புலவர்கள் முறப்படுவர். அதன் பயனாகக் ''குடிப் பொருள் அன்று நும் செய்தி கொடித்தேர், நும்மோரன்ன வேந்தர்க்கு', மெய்ம்மலி உவகை செய்யும் இவ்விகலே' (புறம். 45=7-9) என்றும், ''... விருந்திற் புன்கணோவுடையர், கேட்டனையாயின் நீ வேட்டது செய்ம்மே'' (புறம். 46:7,8) என்றும் அறிவுணர்வு சான்ற கோவூர் கிழார், உரிய வேந்தர்களிடம் அறிவுறுத்தி வேண்டும் பாடல்கள் தோன்றலாயின. வள்ளல் பேகன், தன் மனைவியைப் பிரிந்திருந்த காலை, அவன் மனைவி கண்ணகி சார்பில் பேகனிடம் சென்ற புலவர் பெருமக்களான கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகியோர் அவனது செயலைக் கண்டிக்காது, அவளது நிலையினை விளக்கிக்கூறி வேண்டிக் கொண்ட பாடல்களைப் புறநானூற்றில் காண முடிகின்றது (புறம். 143-147). நின்னையாம் பாடக்கேட்ட அவள் ''குழல்இனைவது போல் அழுதனள் பெரிதே'' (புறம். 143-15) என்பது கபிலர் கூற்று. ''பசித்தும் வாரேம் பாரமும் இலமே... இனமணி நெடுந்தேர்ஏறி, இன்னாதுறைவி அரும்படர் களைமே'' (புறம். 145:4,9,10) என்பது பரணர் வேண்டுகோள். ''பரிசில் நல்குவையாயின் குரிசில் நீ... அரிவை... கோதைபுனைய, வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே'' (புறம். 1465,7,10,11) என்பது அரிசில் கிழாரின் வேண்டுகோள். ''அரிவை .. கூந்தல் ... புதுமலர் கஞல, இன்றுபெயரின் அதுமன் எம் பரிசில் ஆவியர் கோவே'' (புறம். 147:5,6,8,9) என்பது பெருங்குன்றூர் கிழாரின் வேணவ ாவாகும்.

எத்தலைவரேனும் உலகம் பழிக்கத்தக்க செயல் புரிந்தால் அதனை அக்காலத்தே, வெளிப்படையாகச் சுட்டிப்பாடும் மரபினைக் காணமுடியவில்லை. ஆனால், அத்தகு கொடுமையினைத் தம் கவிதையில் பதிவு செய்துள்ள புலவரும் இல்லாமலில்லை. சங்கப் பாடல்களில் மிகுதியாகப் பாடியவரும், பல தொகை நூல்களில் இடம்பெற்றவரும், வரலாற்று நிகழ்வுகள் பலவற்றைத் தம் பாடல்களில் வெளிப்படுத்தியவருமாக விளங்குபவர் பரணர். நன்னன் என்னும் மன்னன், செய்த ஒரு பழிச்செயலை, அகத்திணைப் பாடல் ஒன்றில், உவமை வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். குற்றத்திற்குத் தண்டனை என்னும் பெயரால், ஓர் இளம் பெண்ணைக் கொலை புரிந்த கொடுமையைப் பழந்தமிழக அரசியல் வரலாற்றில் கரும் புள்ளியாக அமைந்து விட்ட நிகழ்ச்சியைக்-காலங்கள் தோறும் படிப்பவர்கள் உளம் கொதிப்புறுமாறு அமைந்த பழியினைக் கவின்மிக்க கவிதையாக்கிய சிறப்பு பரணருக்குரியதாகும். இது போன்ற, புலப்பாட்டினால், உவமத்திற்குக் கருதிய பொருளைச் சிறப்புற விளக்குவதன் மேலாக, கவிதைக்கு அணி செய்வதன் மேலாக வரலாற்றை உணர்த்தும் ஆற்றல் உண்டென்பதனை உணரலாம். 'வரலாற்றுண்மை' என்பது போல, 'வரலாற்றுவமையும் உண்மையைப் புலப்படுத்துவதில்' சிறப்பிடம் பெறுகின்றது.

நன்னனைப் பற்றிய குறிப்புக்கள் சங்க நூல்களில் பல புலவர்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. பரணர் குறிப்பிட்டுள்ள ஆறு இடங்களில் (குறு. 73,292; நற்.270; அகம். 208, 258, 256) குறைந்தது நான்கு இடங்கள் (குறு. நற். அகம்.) ஒரே நன்னனைக் குறிப்பனவாகக் கொள்ளலாம். அவனைப் பற்றிய செய்தி வருமாறு. ஆற்றங் கரைக்கண் இருந்த, அவனுக்குரிய மாமரத்தின் காயொன்று நீரில் விழுந்து மிந்தது வந்து கொண்டிருந்தது. நீராடச் சென்ற ஓர் இளம்பெண், அந்தக் காய் பற்றி அறியாதவளாய், அதனை எடுத்துத் தின்று விட்டாள். இச்செய்தி நன்னனுக்கு எட்டியது. எவ்வகையானும் அம்மரத்தின் காய், கனி ஆகியவற்றை எவரேனும் உண்டனராயின் அவர் கொலைத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர் என்று அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதனை அறியாத அப்பெண் அக்காயினை உண்ட குற்றத்திற்காக அவள் கொல்லப்பட வேண்டும் என நன்னன் ஆணையிட்டான். அதனை அறிந்த பெற்றோர் தக்காரொடு நன்னன் பாற்சென்று, அப்பெண் புரிந்த குற்றத்திற்குக் கழுவாயாக, 81 யானைகளையும், அவள் எடைக்கு நேரான பொன்னாற் செய்த பாவையும் கொடுக்க முன் வந்தனர். அவற்றை ஏற்க மறுத்து அந்த இளம்

பெண்ணைக் கொன்று விட்டான். பெண் கொலை புரிந்தோர், கடுநரகம் (நிரையம்) எய்துவர் என்பது அற்றைநாள் மக்களின் நம்பிக்கை. பெண் கொலை புரிந்த நன்னன் நிரையம் செல்வது உறுதி. மீட்க முடியாதவாறு பெண் கொலை செய்யப்பட்ட பின்னர், நன்னனிடம் யார் என்ன கூறியும் என்ன பயன் விளையும்? அதனால், காலங்கள்தோறும் படிப்பவர்கள் நன்னனது பெரும் பழி நினைத்துப் பழித்தல் வேண்டும் என்னும் கருத்தில் தம் கவிதையில் நிலைபெறுத்த விரும்பிய பரணர், இதனைப் புறத்திணையில் பாடும் வாய்ப்பின்மையால், தம் அகத்துறைப் பாடலொன்றில் உவமை வாயிலாக இப்பழி நிறைந்த வரலாற்றைப் பதிவு செய்து காட்டியுள்ளார்.

'இரவில், விருந்தினனாய், அரிதாக வந்த தன் காதலனைச் சந்திக்க இயலாதவாறு, தன் தாய் உறங்காது காத்து நிற்பதுணர்ந்து, அவள் கடும் நரகம் செல்வாளாக' என்று கூறுகின்றாள். அதற்கு உவமையாகப் பழிச்செயலால் நரகம் புகும் நன்னன் போல, அன்னையும் நரகம் புகுவாளாக' என்று தலைவி கூறுவதாகப் பரணர் பாடிய பாடல் வருமாறு:

*' மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை*
*புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு*
*ஒன்பதிற்று ஒன்பது களிற்றோடு அவள்நிறை*
*பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்*
*பெண் கொலை புரிந்த நன்னன் போல*
*வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை*
*ஒருநாள், நகை முக விருந்தினன் வந்தெனப்*
*பகைமுக ஊரின் துஞ்சலோ இலளே'* - *(குறுந்.292)*

பரணர், கூறவிழைந்ததை அகத்திணைக் கருத்திற்கு இறுதி மூன்று அடிகளேபோதும்; உவமை எதுவும் தேவையில்லை. அந்நிலையில் எட்டடிப் பாடலில் ஐந்தடிகள் உவமைக்காகப் பயன்படுத்தியுள்ளார். உவமை கூறாமலேயே விளங்கும் ஒரு சிறிய செய்திக்கு, நெடிய ஓர் உவமை கூறியதிலிருந்து, உவமையால் அப்புலவர் உணர்த்த விரும்பிய செய்தியின் இன்றியமையாமையும், சிறப்பும் புலனாகும்.

நன்னனது மாமரம் அவனுடைய காவன் மரமாகும் என்பதனையும், அதனை வஞ்சினம் மிக்க கோசர் என்பார் அம்மாமரத்தினை வெட்டி வீழ்த்தி, அவன் நாட்டினும் புக்கனர் என்பதனையும் பரணர் பிறிதொரு அகப்பாடலில் (குறு. 73=2-4) குறிப்பிட்டுள்ளார். அவன் கொடுமைப் பண்புடையவன் என்பதனைப், 'பகை மன்னர்களை வென்று அவர்களின் உரிமை மகளிரைக் கவர்ந்து வகையில் பார்த்தால், பாட்டுடைத்

வந்து, தலையை மழித்து அக்கூந்தலைக் கயிறாகத் திரித்து, அதுகொண்டு பகைவரின் யானையைப் பிணித்தான்' என்னும் செய்தியினையும் பரணர் தம் நற்றிணைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார் (நற். 272, நாராயணசாமி ஐயர் உரை).

புலவர் முற்பட்டுத் தடுத்திராவிடின், பழந்தமிழக வரலாற்றில் மேலும் கரும் புள்ளிகளாக அமைந்து விடக்கூடிய சில வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. அவை உவமைகளாக அமையாவிட்டாலும் பண்டைத் தமிழ் மன்னர்களின் உயர்குணத்திற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றமையால் ஈண்டுக் குறிப்பிடுவது ஏற்புடையதாகும்.

ஒரு குடியிற் பிறந்தவர்களாய்ப் - பங்காளிகளாக - விளங்கிய சோழன் நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும் பகை கொண்டதன் விளைவாக உறையூரிலிருந்த நெடுங்கிள்ளியொடு போர்புரிய முற்பட்டு நலங்கிள்ளி உறையூரினை முற்றுகையிட்டான். ஒரு குடிப்பிறந்தோர் பகைத்துப் போர்புரிவதால் அவர்தம் குடிக்கு - சோழர் குடிக்கு - உண்டாகும் பழியை நினைந்து அதனை நீக்கக் கருதிய புலவர் கோவூர்கிழார் இருவரையும் அமைதிப்படுத்தும் வகையில் பல அறிவுரைகளைக் கூறி இறுதியாக 'இப்போர் ஏனைய சேர பாண்டியர் உங்கள் குடியினை எள்ளி நகும் நிலை ஏற்படுத்தும்' என்று விளக்கியதனை ஏற்று இருவரும் பகைதணிந்து தம் குடிப்பழி துடைத்தனர். (புறம். 45). சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், மலையமான் மக்களை, யானையை ஏவிக் கொல்ல முற்பட்ட நிலையில் கோவூர் கிழார் இடைப்புகுந்து, கிள்ளியின் பரம்பரைப் பண்பையும், மலையமான் மரபினது மாண்பினையும் எடுத்துக் கூறிக் 'கேட்டனையாயின் வேட்டது செய்ம்மே' என்றுரைத்தார். அதுகேட்டுத் திருந்திய கிள்ளிவளவன் கொலையினைத் தவிர்த்து, மலையன் மக்களை வாழ்வித்தான் (புறம். 46). சான்றோர் அறிவுரையை ஏற்றுச் செயல்பட்டமையால், அம்மன்னர்கள் பழியின்நீங்கி, 'உரையும் பாட்டும் உடையோ'ராய் விளங்குகின்றனர். ஆன்றோர் அறிவுரை கேட்கும் பண்பினை விளக்குகின்றமையால், புலவரின் அறிவுரைகள் புகழுரைகளாய் அமைந்து, புறநானூற்றில் துணைவஞ்சித் துறையில் இடம்பெற்றுத் திகழ்கின்றன. அவ்வாறே நலங்கிள்ளியிடமிருந்து உறையூர் வந்த புலவர் இளந்தத்தனாரை ஒற்றன் எனக் கருதிக் கொல்லப் புக்க நெடுங்கிள்ளிக்கு உண்மையை விளக்கிக் கோவூர் கிழார் அப்புலவரை உய்யக் கொண்டார் (புறம். 47). அங்ஙனமின்றிச் சான்றோர் சொற்கேளாமையால் நன்னன் நீங்காப் பழிக்கோர் நிலையமானான்!

பொருளிலிருந்து (உவமேயம்) உவமைக்கும் சில பண்புகள் கொள்ளும்

தலைவியின் மனநிலையில் அவள் தாய் நிரையம் புகும் பண்பு போல், பெண் கொலை புரிந்த நன்னனும் 'வரையா நிரையம்' செல்லவேண்டும் என்று பரணர் விரும்பும் உணர்வையும் உணர்தல் கூடும்.

தொகை நூல்களுள் பத்துப் பாடல்களுக்கு மேலும் பாடிய புலவர்களுள் குடவாயில் கீரத்தனார் ஒருவர். அவர் கொண்டுள்ள குடவாயில் என்னும் ஊர்ப் பெயரடை கொண்டு மட்டுமல்லாமல் தம் பாடலுள் குடவாயில், அதன் மரூஉப் பெயரான குடந்தை என்னும் தம் ஊரினைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளமையும் கொண்டு அவரது ஊர்ப்பற்றினை நன்குணரலாம். குடவாயில் என்பது சங்க காலத்திலேயே குடந்தை எனத் திரிந்து வழங்கிய உண்மையினைப் பேராசிரியர் தம் உரையில், ''இனிக்குடவாயில் என்பதனை, 'கொற்றச்சோழர் குடந்தைவைத்த' (அகம், 60:13) என்றும், உறையூர் என்பதனைப், 'பிறங்கு நிலைமாடத்து உறந்தையோனே' (புறம். 69:10) என்றும் மேலையார் திரித்த வகையானே இக்காலத்துத் திரித்துக் கொள்ளப்படுவன உள'' (தொல். செய்யுள் 80 பேரா. உரை) என்று கூறியிருப்பதனால் உணரலாம்.

தலைவியின் எழில் நலம் அனைத்தையும் விளக்கிக் காட்டும் வகையில், வளங்கள் பலவும் நிறைந்த நகர் ஒன்றின் உவமையாகக் கூறுவது சங்கப் புலவர் மரபுகளுள் ஒன்றாகும். அவ் வகையில் குடவாயில் கீரத்தனார், தம் பாடலில் குறிப்பிடும் தலைவியினைத் 'தண் குடவாயில் அன்னோள்' (அகம். 44:18) என்று குறிப்பிட்டுள்ளார். குடவாயில் வளத்தைக் குறிப்பிட, மேலும் சில அடிகளை முன்னர்ச் சேர்த்துப், 'பழம் பல் நெல்லின் பல்குடிப்பரவைப், பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளை' (16,17) என்று கூறியிருக்கலாம்; பாடலில் எந்தக் குறையும் இராது. குடவாயில் கீரத்தனாரின் வரலாற்றுணர்வு சான்ற உள்ளம், இந்த உவமையை மேலும் விரித்து, வரலாற்று உண்மைகளால் வளப்படுத்திக் காட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

சோழ வேந்தன் சென்னி என்பானுடைய படைத்தலைவன் பழையன். சோழனுக்காகப் படைகொடு சென்ற அவன், நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்னும் அறுவரும் ஒன்று கூடி எதிர்த்துத் திரண்ட பாசறையிடத்தே, அந்த அறுவரும் இறந்துபடச் செய்த பின்னர்த் தானும் களத்தே இறந்துபட்டான். அவன் இறக்கக் காரணமாய் விளங்கிய கணையன் என்பவனையும் அவனது கழுமலம் என்னும் ஊரினையும் கைப்பற்றினான், சென்னி என்னும் சோழ மன்னன். அவனுக்குரியது செல்வம், பகை நாடுகளில் கவர்ந்த செல்வம் ஆகிய நிதியங்களைத் தன்

அழும்பில் என்னும் நகரம். அதனைப் போன்ற, புதுவருவாய், கொண்டதும், யானை படியுமளவு நீர் வளமிக்க குளம், காவற்காடு முதலியன கொண்டதுமாக விளங்குவது தண்ணிய குடவாயில் என்னும் ஊர். அதனை ஒத்தவள் தலைவி.

வினைமுடித்த தலைமகன், விரைவாகச் சென்று தன் தலைவியைக் காணும் விருப்பில், வேகமாகத் தேரைச் செலுத்துமாறு தலைவன் கூறுவதுதான் பாடற்கருத்தாகும். எக்குறையுமின்றி எட்டு அடியில் ஒரு குறுந்தொகைப் பாடல் போன்று அமைய வேண்டிய பாடலைப் பத்தொன்பது அடிகளாக நீண்ட நெடுந்தொகைப் பாடலாக அமையச் செய்தது, தலைவிக்குக் கூறப்பட்ட வரலாற்றுவமையேயாகும். இந்தப் பாடலிலன்றி வேறெங்கும் காணமுடியாத வகையில் அமைந்துள்ள வரலாற்றுக்குறிப்பு வருமாறு:

*"நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி*
*துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி*
*பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு*
*அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்*
*பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்*
*கண்டது நோனான் ஆகித் திண்டேர்க்*
*கணையன் அகப்படக் கழுமலம் தந்த*
*பிணையலங் கண்ணிப் பெரும்பூண் சென்னி*
*அழும்பில் அன்ன அறாஅ யாணர்ப்*
*பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளைத்*
*தண்குட வாயில் அன்னோள்*
*பண்புடை ஆகத்து இன்துயில் பெறவே"* -*(அகம் 44:7-19).*

இவ்வாறு நெடிய உவமைகளானன்றி, அடிகள் குறைந்த உமையாலும் அரிய வரலாற்றுச் செய்திகளைக் கூறியுள்ள இடங்களும் பலவுள.

தோழி, தலைவனிடம் தலைவி இற்செறிக்கப்பட்டுள்ள செய்தியினைக் கூறி, விரைவில் வரைந்து கொள்ளுமாறு, அறிவுறுத்தி அமைக்கப்பட்ட ஒரு பாடலில் இதே, குடவாயிற் கீரத்தனார், 'தலைவியை நீ சந்திக்கும் செயலை அன்னை அறிந்தால், மிகவும் அரிய காவலை அமைத்து விடுவாள், அதனால் விரைவில் வரைந்து கொள்ள முயல்வாயாக' என்று கூறுகின்றாள். அன்னை செய்யக்கூடிய காவற்கடுமையினை விளக்கித் தோழி காட்டியிருக்கும் செய்தி நோக்கத் தக்கது. 'வென் வேல், கொற்றச் சோழர் குடந்தை வைத்த, நாடுதரு நிதியினும், அருங்கடிப் படுக்குவள் அறனில் யாயே'' (அகம்.60:13-15). பண்டு அரசர்கள் தம் நாட்டில் எஞ்சிய செல்வம், பகைவர் தந்த நிறைச்

நாட்டகத்தே இயற்கையாகவும் செயற்கையாகவும் அமையும் காவல் மிக்க காப்பகங்களில் சேமிப்பதுண்டு. அச்செயல் இக்காலத்தும் தொடர்வதாகும். சோழ மன்னர், பல்வகையாலும் பெற்ற நிதியங்களைக் குடந்தையில் (குடவாயிலில்) அமைக்கப்பட்டிருந்த காப்பகங்களில், அரிய காவல் அமைத்துக் காத்து வந்துள்ளனர். அந்த நிதியக் காப்பகத்தின் காவல் அருமையை உள்ளூரிலிருந்து நன்கறிந்த குடவாயிலார் அதனைத் தாய் தன் மகளுக்குச் செய்யும் அருங்காவலுக்கு உவமையாக்கிக் கூறியுள்ளார். குடந்தை என மருவிய குடவாயில் வளங்கள் *நிறைந்திருந்ததோடு, நீர் அரணும், காட்டரணும் கொண்டதாக இருந்தது* என்பதனை உய்த்துணரும் வகையில், மேற்குறித்த பாடலில் (அகம்.44) 'பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளை' எனும் தொடரினை அமைத்துள்ளார். மன்னர்கள் தம் பெரும் நிதியங்களை வைத்துக் காக்கும் காப்பகங்கள் காவல் மிக்கனவாய், நீர் முதலிய அரண்கள் பெற்றனவாய் விளங்குவதோடு, பிறர் அறியாவண்ணம், அறிந்து கவராவண்ணம் நீரினுள் மறைத்து வைக்கத்தக்கனவாய் இருந்துள்ளன என்னும் உண்மையை மாமூலனார் தம் அகப்பாடல் ஒன்றில், தலைவர் பெற விரும்பிச் சென்ற பொருள், ''வடநாட்டு நந்த அரசமரபினர் கங்கை ஆற்றினிடையே மறைத்து வைத்த நிதியம் போலும் அருமை *வாய்ந்ததோ?''* என்று வினவும் வகையில், ''பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர், சீர்மிகு பாடலிக் குழீஇ, கங்கை நீர் முதல் சுரந்த நிதியம் கொல்லோ'' (அகம்.265: 4-6) என்று வினவுவதன் வாயிலாக அறியலாம்.

உவமை என்னும் போது, உவமானத்திலும் (உவமை) உவமேயத்திலும் (பொருள்) அமையும் பொதுத் தன்மை (வினை, பயன், மெய், உரு முதலியன) சமமாகவே இருக்கும். 'புலிபோலப் பாய்ந்தான்' *என்புழிப் புலியின் கண்ணும் பாய்ந்தவன் கண்ணும்* அமையும் பாய்ச்சல் செயலின் (வினையுவமம்) அளவு சமமாக இருக்கும் என்பது கருத்து. புலியினும் மிக்க விரைவாக அல்லது குறைந்த விரைவாகப் பாய்ந்தான் என்று பாய்ச்சல் வினையின் மிகுதி குறைவு கூறுவதாயின் *அதனை* 'உறழ்ச்சி', (உறழ்ந்து கூறுதல்) என்பர். இந்த உறழ்ச்சி வாசகத்தைக் கூர்ந்து நோக்கினால், முதற்கண் இரண்டையும் ஒப்பிடுதலும் பின்னர் உறழ்ச்சி கூறுதலும் அமைதல் புலனாகும். அதனால் இவ்வாறு கூறுவதும், ஓராற்றான் 'உவமை' எனத் தக்கதே யாகும். இந்த உண்மையை, உவம உருபுகளைக் கூறும் நிரலுள் 'உறழ்' என்பதும் இடம் பெற்றிருப்பது கொண்டும், உணரலாம். பிறிதொரு வகையாலும் இதனை அறிந்து கொள்ளலாம்.

ஐந்தாம் வேற்றுமை உருபினையும், அஃதுணர்த்தும் பொருண்மையினையும், கூறவந்த தொல்காப்பியர், ''ஐந்தாகுவதே, இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி, இதனின் இற்று இது, என்னும் அதுவே'' என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு நச்சினார்க்கினியர், 'ஐந்தாவது, பொருவும் எல்லையும் நீக்கமும் ஏதுவும் என நான்கு வகைப்படும். பொரு, உறழ்பொருவும் உவமப் பொருவும் என இருவகைப்படும். உறழ்தல் ஒன்றனான் ஒன்றை மிகுத்தல்' என்று விளக்குவர் (தொல்-சொல்.நச்சர். (78) உரை). மேலும், விசாகப் பெருமாளையர் தமது நன்னூலுரையில் இதனை விளக்குகையில், ''காக்கையிற் கரிது களம்பழம் என உவமானமும் உவமேயமுமாக வருமிடத்தில், காக்கையின் - காக்கைபோல எனப் பொருள் கொண்டால் ஒப்புப் பொருள்; காக்கையின் - காக்கையைக் காட்டிலும் எனப் பொருள் கொண்டால் எல்லைப் பொருளாகும்; இதனை உறழ் பொருள் என்றும் கூறுவர்'' (நன்.299) எனக் கூறியிருப்பது கொண்டும் உணரலாம். உறழ் வகையானமைந்த வரலாற்றுவமை ஒன்றினைக் காண்போம்.

தம் சிறப்பினைப் புலப்படுதுவது, ஒரே பெயர் கொண்ட பிறரினின்றும் வேறுபடுத்துவது போன்ற காரணங்களினால் தம் பெயரின் முன்னர் அடைமொழி புணர்த்து வழங்கப்படுவதனைச் சங்கநூல்களில் காணலாம். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்றிங்ஙனம் அடையடுத்து வரும். சங்க கால அரசர்களுள் ஒருவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் ஆவான். அவன் பெருவீரனாகத் திகழ்ந்ததோடு, தாமே கவிதை புனையும் பாவலனாகவும் திகழ்ந்துள்ளான். புலவராகவும், புலவர் பாடும் புகழ்சான்றவராகவும் திகழ்ந்த அம்மன்னன் தன் இளமைக் காலத்திலேயே பாண்டி நாட்டு அரசுரிமை பெற்று விளங்கிய நிலையில், சேர, சோழ வேந்தர்கள் குறுநில மன்னர் ஐவர் ஆகியோரை ஒருங்கே எதிர்த்துப் போரிட வேண்டிய நிலையில் அவன் உரைத்த சூளுரை (வஞ்சின மொழி - சபதம்) அரிய கவிதையாக வெளிப்பட்டுப் புறநானூற்றில் இடம் பெற்றுத் திகழ்கிறது. (புறம். 72).

காஞ்சித் திணை வஞ்சினக் காஞ்சித் துறையில் அமைந்த அந்தப்பாடலில், பகைவர் எண்ணிக்கையாலும், நாற்படை மிகுதியாலும் செருக்குற்று, இளையன் என்று தன்னை இகழ்ந்து கூறிப் போருக்கெழுந்ததைப் பொறாத நெடுஞ்செழியன் கூறிய வஞ்சின மொழி உலக வீரர் வரலாற்றுள் அவனுக்கோர் இடத்தினைப் பெற்றுத் தந்துள்ளது. தலையாலங்கானம் (ஆலங்கானம்) என்னுமிடத்தில் தன்னை

எதிர்த்தவர்களை எதிர்த்துத் தமியனாகப் போர் புரிந்து, அவர்களைக் கொன்று வென்றமை வியத்தற்குரிய அருஞ்செயலாகும். அவன் கூறிய வஞ்சின மொழியில் தன்னை எதிர்த்தவர் எத்தனை பேர் என்று அவன் கூறவில்லை. பின்னர் அவனது வெற்றியைப் பாடிய புலவர் வாயிலாகவே அதனை அறிய முடிகிறது. குடபுலவியனாரின் பாடலில், தலையாலங்கானத்தே அவனை எதிர்த்தவர் ஏழுபேர் என்பதனைக் 'கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை, எழுவர் நல்வலங் கடந்தோய்' (புறம். 19; 16-17) என்னும் தொடரால் அறியப்படும். அவன் ஆலங்கானமென்னுமிடத்தில் போர் புரிந்து பகைவரை அழித்தான், என்பதனைக் கல்லாடனார், 'ஆலங்கானத்து அமர் கடந்து அட்ட காலமுன்ப' (புறம், 23; 16-17) என்பதனால் உணர்த்தியுள்ளார்.

நெடுஞ்செழியனும் அவனைப் பாடிய கவிஞர் சிலராலும் புறநானூற்றில் உணர்த்தப்பட்ட இப்போரின் விவரங்கள் அனைத்தையும், மதுரை நக்கீரனார் தமது அகநானூற்றுப் பாடலொன்றில் உறழ்ச்சி உவமம் ஒன்றினால் வெளிப்படுத்தியிருப்பது சிறப்பு மிக்கது. அது, தலையாலங்கானத்துச் செருவென்ற எனும் அடைமொழியின் சிறப்பினையும் பொருத்தத்தையும் நன்கு புலப்படுத்துவதாக உள்ளது (அகம். 36) இருபத்துமூன்று அடிகள் கொண்ட அந்த நானூற்றுப் பாடலில் தலையாலங்கானப் போர் பற்றிய உவமம் 12 அடிகளைக் கொண்டுள்ளது.

நக்கீரரின் பாடல், பரத்தையரிடமிருந்து பிரிந்து வந்த தலைவனொடு புலந்து தலைமகள் கூறுவதாக அமைந்தது (அகம்.36). 'ஊரனே, நீ, வையை யாற்றின் கரைக்கண்ணமைந்த விரிமலர்ச் சோலையொன்றிலே, புதிய இளம் பெண் ஒருத்தியை மணம் செய்து கொண்டாய் என்று ஊரிலுள்ளார் கூறுவர். ஆனால் அதுபற்றி ஊர்மக்கள் அலர் (பழிப்புரை) கூறும் ஆரவாரம், நெடுஞ்செழியன் ஆலங்கானப் போரில் தன் பகை எழுவரையும் எதிர்த்துப் பொருதழித்து வாகை சூடிய போது அவனுடைய வீரர்களிடையே எழுந்த வெற்றி ஆரவார ஒலியினைக் காட்டிலும் மிகுதியாக இருந்தது' என்று தலைவி கூறுகின்றாள். ஊரார் உரைக்கும் அலர்மொழியின் மிகுதியைக் காட்டக் கூறிய, உவமை வகையால் உறழ்ந்து காட்டிய ஆரவார ஒலி பழிமொழியின் அகலத்தையும் ஆழத்தையும் நன்குணர்த்துவதாக அமைந்துள்ளது. அதுவருமாறு : கொடித்தேர்ப் பாண்டிய மன்னன், தலையாலங்கானம் என்னும் இடத்தில் நிகழ்ந்த போர்க்களம் முழுவதும் இரத்தத்தால் சிவக்குமாறு போரிட்டான். எதிர்த்து வந்த சேரமன்னன், பறவைகளின் பேரிரைச்சலை அடக்கினான். ஆலமரத்துப் பறவைகளின்

சோழமன்னன் ஆகியோர், திதியன், எழினி, எருமையான், இருங்கோ வேண்மான், பொருநன் ஆகியோர் அடங்கிய எழுவரையும், அவர்களின் வலிமை கெடுமாறு, ஒரே நாளில் அழித்து அவர்களின் முரசங்கள் வெண்கொற்றக் குடைகள் அனைத்தையும் கைப்பற்றினான். பாண்டியன் அவ்வாறு களவேள்வி புரிந்து வாகை சூடியபோது, அவனுடைய வீரர்கள் எழுப்பிய வெற்றி ஆரவாரம், ஊரார் அலர்கூறி எழுப்பிய ஆரவார்த்தினும் மிக்கதாக இருந்தது''.

*''... எழுவர் நல்வலம் அடங்க ஒருபகல்*
*முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்*
*கொன்று களம் வேட்ட ஞான்றை*
*வென்றி கொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே''* - *(அகம் 36: 20-23).*

இவ்வாறு புறப்பாட்டில் சுருக்கமாக இடம் பெற்றனவும் பெறாதனவுமான சில வரலாற்றுண்மைகள், அகப் பாடல்களுள் உவமை வாயிலாகவோ பிற வாயிலாகவோ சுட்டப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அவற்றைத் தொகுத்து, புறத்தில் இடம் பெற்றிருந்தால், அச்செய்தியோடும் அதற்குரியவரோடும் தொடர்பு படுத்திக் கண்டால் பண்டைத் தமிழர் வரலாறு மேலும், விவரங்கள் கொண்டதாக அமையக் காணலாம். சில பௌராணிகச் செய்திகள் கூட, அவற்றின்மூல நூலில் காணப்படாமல் சங்க நூலில் மட்டும் காணப்படுவனவாக அமைந்துள்ளன. அத்தகு செய்திகள் எண்ணிக்கையில் குறைந்தனவாயினும், மூலநூலொடு அவற்றை இணைத்து ஆராய்வதற்குப் பயன்படுவனவாக உள்ளன.

இராமாயணம், பாரதம், பாகவதம் போலும் வடமொழி நூல்கள் பழந்தமிழர்களால் அறியப்பட்டிருந்த பாங்கினைச் சங்கப் பாடல்கள் சில கொண்டுணரலாம். அவற்றின் கருத்துக்களைக் கூறப்படுங்கால் அம்மூல நூல்களில் காணப்படாத சில குறிப்புக்களையும் தமிழ்ப் புலவர்கள் கூறியிருப்பது சிந்தனைக்குரியது. 'காதலர்களின் காதல் அறிந்து, ஊரவர் கூறிய அலர் மொழிகள், அவனது திருமணம் பேசிக் கூடிய நிலையில் அடங்கி, ஓய்ந்தது' என்னும் செய்தியினைத் தலைவியிடம் தோழி கூறுகின்றாள். ஊரவர் வாயடங்கியதற்கு (ஒலி ஓய்ந்தமைக்கு) உவமையாக இராமாயணச் செய்தி ஒன்றினை உவமையாக்கியுள்ளார், மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மன்னனார் என்னும் புலவர் (அகம். 72). இராமன் சீதையைத் தேடி இலங்கை நோக்கிச் சென்றபோது, பாண்டியர்க்குரிய கோடிக்கரையில் (திருவணைக் கரை), ஓராலமரத்தின் கழிந்து உடன் வந்தாரொடு சிந்திக்கையில், அம்மரத்தில் உறைந்த

ஒலி அவிந்தது போல ஊரவர்களின் அலர்ஒலி அடங்கியது என்னும் கருத்தில்,

> *' வென்வேற் கவுரியர் தொன்முது கோடி*
> *முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை*
> *வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த*
> *பல்வீழ் ஆலம் போல*
> *ஒலியவிந் தன்று இவ்வழுங்கல் ஊரே'* - *(அகம். 70; 13-17).*

எனக் கூறியுள்ளார். இது புராணச் சார்பான உவமையாயினும், புராண வரலாற்றை ஆய்வதற்கு உதவியாக உள்ளது. இச்செய்தி, வடமொழி ஆதிகவியினது காவியத்தில் காணப்பெறவில்லை என்று ஆய்வாளர் கூறுவர். அங்ஙனமாயின், பன்மொழியில் இடம் பெற்ற இராமாயணம் பற்றிய செய்தி ஆய்விற்கு இஃதொரு குறிப்பாகும்.

பாகவதத்தில் கண்ணன் திருவிளையாடல்களில் (லீலை), சில சங்கப்பாடலில் இடம்பெற்றுள. உவமையாக இடம் பெற்றுள்ள ஒரு செய்தி வருமாறு. தன் பெண் யானை உண்பதற்காக அதன் ஆண் யானை, உயர்ந்த மாமரத்தின் கிளையினை வளைத்துத் தந்தது என்பதற்கு உவமையாக, மதுரை மருதன் இளநாகனார்,

> *' ....வடாஅது*
> *வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை*
> *அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்*
> *மரம் செல மிதித்த மாஅல் போல'* - *(அகம்.59: 3-6)*

என்று கூறியுள்ளார். 'வடதிசை நாட்டிலுள்ள, நீர் வளம் குறையாத யமுனை ஆற்றின், நெடிய நீர்த்துறைக்கண் நீராடிய அண்டர் மகளிர் (ஆயர்குலப் பெண்டிர்) தழையை உடுத்திக் கொள்வதற்காகக் குருந்த மரம் வளையும்படி மிதித்த கண்ணன்போல' என்பது உவமையின் கருத்து. நீராடும் மகளிர் தழையுடை அணியுமாறு ஆண்டு நிகழ்ந்த நிகழ்ச்சி யாது என்பதனை இந்த அகநானூற்றுப் பாடல் விளக்கவில்லை. பெரும்பாலும் உவமை படிப்போர் அறிந்ததாக இருத்தல் வேண்டும் என்னும் கருத்தின்படி பார்த்தால், கண்ணன் குருந்தொசித்த செய்தியும் அதன் காரணமும் அற்றை நாள் தமிழ் மக்கள் நன்கு அறிந்தனவாக இருத்தல் வேண்டும். இதே செய்தியைச் சங்க காலத்திற்குச் சில நூற்றாண்டுகள் பிற்பட்டுத் தோன்றிய திருத்தக்க தேவர், சமணச் சார்புடைய தமது காப்பியத்தின் ஒரு பாடலில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

கூறவந்த ஊன்பொதி பசுங்குடையார் இராமாயணச் செய்தி ஒன்றினை

*' நீனிற வண்ணன் அன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
வானிற வண்ணன் நோக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானை வேந்தே விரிபுனல் தொழுனை யாற்றுள்
கோனிற வளையினார்க்குக் குருந்தவன் ஒசித்த தென்றான்'*

*(சீவக. 209)*

'தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன் - தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை' என்று பாரதி பாடிய கண்ணன் அன்றொரு நாள், யமுனையாற்றுக் கரையினில் தங்கள் ஆடைகளை வைத்துவிட்டு ஆற்றில் நீராடுங்கால், அவர்கள் அறியாமல் மறைந்து வந்த கண்ணன், அவர்கள்தம் ஆடைகளை எடுத்து மரக்கிளைகளில் மாட்டி விடுகின்றான். அப்போது, தன் தமையன் பலராமன் அப்பக்கம் வருவதனை அறிந்த கண்ணன், அப்பெண்டிர் தழையுடையணியும் வகையில் தான் ஏறியிருந்த குருந்த மரக்கிளையினைத் தாழுமாறு மிதித்து அழுத்தினான் என்பது பாடலின் கருத்து. கண்ணனைத் திருமாலின் அவதாரமாகக் கருதும் சமயத்தவர் இச்செயலினைத் தெய்வத் திருவிளையாட்டாகப் போற்றுவர். வைதிக சமயத்தை எதிர்த்துத் தோன்றிய சமண சமயத்தவராதலின் திருத்தக்க தேவர், இச்செயலை உயர்வாகக் கொள்ளாமல் எடுத்துக்காட்டியுள்ளார். விசயமாதேவியை மணந்த சச்சந்தன் (சீவகன் தந்தை), அவள்பால் மோகமுற்று ஆட்சியிற் கவனம் செலுத்தாமல், அப்பொறுப்பினைக் கட்டியங்காரனிடம் ஒப்படைக்கின்றான். மிக்க காமத்தின் தீயவிளைவுகளை எடுத்துக்காட்டுடன் கூறி அறிவுறுத்திய நிமித்திகனைச் சச்சந்தன் புறக்கணித்தான். நிமித்திகன் கூறிய எடுத்துக்காட்டுகளில் ஒன்றுதான் கண்ணன் திருவிளையாடல் பற்றிய மேலே குறிப்பிட்ட பாடல். தேவர் காலம் சமயக் காழ்ப்பு மலிந்த காலமாதலின் தன் கருத்திற்கேற்ப இந்நிகழ்ச்சியினைக் கூறியுள்ளார். சமயக்காழ்ப்பு, மிகுபற்று ஆகிய இல்லாத சங்ககாலத்தவராதலின் மருதன் இளநாகனார் விருப்பு வெறுப்பற்ற நிலையில் செய்தியினைப் பட்டாங்கு கூறி உவமையாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர் கூறிய உவமை புராண வரலாறு பற்றியதாயினும், தமிழிலும் பிறமொழியிலும் அமைந்த சீவகன் பற்றிய புராணத்தை ஆராய முற்படுவோர்க்கு அரியதொரு குறிப்பாகும்.

தன்னை யாழில் இசைத்துப் பாடிய பாணர் குடும்பத்திற்கு, இளஞ்சேட்சென்னி, அரிய பல அணிகலன்களை நல்கினான். அவற்றை முன்னர்க் கண்டறியாத பாண் சுற்றத்தினர், விரலில் அணிவதனை செவியிலும், செவியில் அணிவதனை விரலிலுமாக, மாற்றி அணிந்தனர். கண்டார் நகைக்கும் வண்ணம் நகை மாற்றி அணிந்தமைக்கு உவமை

உவமை கூறியுள்ளார். இராவணன் சீதையைக் கவர்ந்து வான்வழிச் சென்றபோது அவள் தன் அணிகலன்களைத் துணியிற் பொதிந்து தரைமீதிட்டாள். அதனை எடுத்த குரங்குகள், எப்படி அவற்றை அணிவதென அறியாது, மாற்றியணிந்து மகிழ்ந்ததனை உவமையாகக் கூறியுள்ளார்.

> *"கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை*
> *வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை*
> *நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்*
> *செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாஅங்கு"*

என்பது புலவர் கூற்று (புறம். 378: 18-21). தமிழில் இராமாவதாரம் எழுதிய கம்பர் இவ்விடத்தைக் கூறுங்கால்,

> *"மழை பொரு கண்இணை வாரியோடு தன்*
> *இழை பொதிந் திட்டனள் யாங்கள் ஏற்றனம்" - (கம்ப.கலன்காண்.2)*

என்று மட்டுமே கூறியுள்ளார். இதுபற்றி இராமனிடம் சுக்ரீவன் கூறுவதாக அமைந்த செய்தி, இராமன் அருமறைக்கு, ஆலமரத்துப் பறவை ஒலியினை அடக்கிய செய்தி ஆகியன தமிழில் பின்னை நூல்களில் இடம்பெற்றனவாகத் தெரியவில்லை. இத்தகு செய்திகள், தத்தம் மொழிகளில் இராமாயணத்தை அறிந்த, புலப்படுத்த விரும்பிய பிறமொழிப் புலவர்கள் மேற்கொண்டிருந்த கருத்துரிமையை உணர்த்துவனவாக உள்ளன. வான்மீகச் செய்திகளைப் பிறமொழி இராமாயணச் செய்திகளோடு ஒத்தும் உறழ்ந்தும் ஆராய முற்படுவோர்க்கு, இவைபோல்வன உதவியாக அமைதல் கூடும்.

சங்கப் பனுவல்களில் புலவர்கள் பயன்படுத்தியுள்ள உவமைகள், அச்செய்யுட்களுக்கு அணியாய் - அலங்காரமாய் - அமைவதனோடு, வரலாறு பண்பாடு போன்றவற்றை உணர்த்தும் கருவிகளாகவும் திகழ்வதனைக் காணலாம்.

# ஊழல் இல்லாத சமுதாயத்தை உருவாக்க இயலுமா?

- அறிஞர். க.சி. அகமுடை நம்பி

இன்றைய உலகில் ஊழல் எனும் சமுதாயச் சீர்கேடு, அங்கிங்கு எனாதபடி, எங்கும், எல்லாத்துறைகளிலும் பரவியுள்ளது. ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், பொதுவாழ்வில் யாராவது ஊழல் செய்துவிட்டால், அவரை மற்றவர்கள் அருவருப்புடன் பார்க்கின்ற சூழல் இந்தியச் சமுதாயத்தில் இருந்து வந்தது. இன்றுள்ள நிலையோ, ஊழல் புரிபவர்களை யாரும் கண்டுகொள்வதில்லை. அன்றியும், ஊழல்மூலம் சென்று சேரும் செல்வம் காரணமாக, தகுதியற்றவர்கள் எல்லாம் நாட்டின் தலைவர்களாகி விடுகிறார்கள். காந்திதேசம் என்ற பெருமை பெற்ற இந்தியாவில் ஊழல் தலைவிரித்தாடுகிறது.

1986-ம் ஆண்டு ஜூன் மாதம், செய்தித்தாள்களில் பரபரப்பான செய்தியொன்று வெளிவந்தது. உத்திரப்பிரதேச மாநிலத்தில் தரம்சிங் ரவாட் (Mr. Dharm singh Rawat) என்ற உயர்மட்ட ஐ.ஏ.எஸ்., அதிகாரி உண்ணாவிரதம் மேர்கொண்டார். நாட்டில் இலஞ்சம் வளர்வதற்கு உயர்மட்ட அரசு அதிகாரிகளே காரணமாக உள்ளனர், இதற்குக் கண்டனம் தெரிவிக்கவே உண்ணாவிரதம் என்றார். அடுத்தடுத்து மூன்றுமுறை அவர் உண்ணாவிரதம் இருந்தார். அவர் விடுத்த குற்றச்சாட்டு சரிதானா? ஊழல் உருவாகி வளர்ந்ததற்கு அரசு அதிகாரிகள் தான் காரணமானார்களா?

அப்போது தமிழ்நாட்டில் காவல்துறைத் தலைவராக (லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு) இருந்த சி.வி.நரசிம்மன், ரவாட்டின் குற்றச்சாட்டை மறுத்தார். அரசியல்வாதிகளின் தூண்டுதல், பக்கபலம் இல்லாமல், அரசு அலுவலர்கள், தம்மளவில் ஊழல் புரிய வாய்ப்பில்லை என்று ஆணித்தரமாகக் கூறினார். எஸ்.குகன், ஐ.ஏ.எஸ். போன்றவர்களும் இக்கருத்தை ஆதரித்தனர்.

உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் ஊழல் பற்றி என்ன சொல்கிறார்? வினைத் தூய்மையைப் பொருத்த மட்டில், அரசுப் பணியாளர்கள், அரசியலாளர்கள் என்ற இருபிரிவினரில், யாரையும் அவர் முன்னிலைப்படுத்திக் கூறவில்லை. தனிப்பட்ட எந்தப் பிரிவினரையும் அவர் பழித்துரைக்கவில்லை. ஊழல் உருவாவதற்குரிய அடிப்படையான சூழலை வள்ளுவர் ஆராய்கிறார்.

நாட்டிலுள்ள பொதுமக்கள் - உழைப்பாளிகள், வணிகர்கள், எழுத்தாளர்கள் என்ற பல்வேறு மக்களிடையே நிலவுகின்ற உணர்வுகள், உறவுமுறைகள், தேவைகள், சிந்தனைகள், விருப்பு வெறுப்புகள் போன்ற பல கூறுபாடுகளிலிருந்து ஒட்டுமொத்த விளைவாக உருவாகின்ற சமுதாயச்சூழலின் உருவகமாகவே நாட்டின் தலைவர்கள் உருவாகிறார்கள். தலைவர்களின் தகைமையை நாட்டுமக்களே வரையறுக்கிறார்கள். அதே போன்று, அரசு அதிகாரிகளும் பொதுமக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்லர். இங்கு தனிமனிதனின் தூய்மை அல்லது தூய்மை இன்மைக்கு எந்த முக்கியத்துவமும் இருப்பதில்லை. தனிமரம் தோப்பாகாது என்பது இவண் கருதிப் பார்க்கத் தக்கது. அதனால்தான் நேர்மையான அரசியலாளர்கள், அதிகாரிகள் ஓரங்கட்டப்படுகிறார்கள். நாட்டுமக்களின் உண்மையான தகுதி (Standard) ஊழலின் வழிப்பட்டதுதான் என்பதே நாம் அறிந்துகொள்ள வேண்டிய கசப்பான உண்மையாகும்.

ஒரு நாட்டில் ஊழல் உதிப்பதற்குரிய சூழல் ஏன் உருவாகிறது? வள்ளுவப் பேராசான் என்ன சொல்கிறார்? நாட்டில் நேர்மையாக உழைக்கும் வினைஞர்களை, அவர்களுடைய மனம் கோணாதபடி அந்நாட்டு அரசு (அரசன்) பேணிப் பாதுகாக்க வேண்டும். அவர்களுடைய மனத்தில் கோட்டம் ஏற்படாதவரை நாடு கோணலாவதில்லை. இதற்கு மாறாக, உண்மையாக உழைக்கும் பணியாளர்களைக் கண்டு கொள்ளாமல் அரசாங்கம் இருக்குமானால், அத்தகு பணியாளர்களின் மனம் நேராக நிமிர்ந்து நிற்க முடியாமல், கோணலுற்றுவிடும். அந்த நிலை ஏற்பட்டுவிட்டால், ஒட்டுமொத்த நாடே கோணலாகிவிடும்.

*நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்*
*கோடாமை கோடாது உலகு.* *குறள் : 520*

ஒரு நாட்டில் ஊழல் எவ்வாறு தலையெடுக்கிறது என்பதை இக்குறள் தெள்ளத்தெளிவாகக் கூறுகிறது. நேர்மையான முறையில் பணியாற்றுகிறவர்கள், கருமமே கண்ணாயினராக உழைப்பவராவர். தாம் செய்து முடிக்கின்ற பணிகளிலேயே மனநிறைவு காண்பவர்கள் (Job Satisfaction) இவர்கள். அதிக வேலை, அதிகச் சாதனை, அதிக மனநிறைவு என்று மென்மேலும் செயலூக்கம் பெறுகின்ற இவர்களிடம் கள்ளத்தனம் குடிபுகுவதில்லை.

ஆனால், இன்றைய பணிசூழல் எவ்வாறு உள்ளது? வினைவேறு சொல்வேறு என்றிருப்பவர்கள், மிகவும் உண்மையாக உழைப்பதாகப் பாசாங்கு செய்வார்கள். அவர்களுடைய மனம், எப்படி

யெப்படியெல்லாம் குறுக்கு வழிகளில் செல்வம் சேர்ப்பது என்றே கணக்குப் போட்டுக்கொண்டிக்கும். இவர்கள் தான் அரசுத்துறைகளிலும் அரசுக் கட்டிலிலும் கொடிகட்டிப் பறக்கிறார்கள். நேர்மையான பணியாளர்கள் பின்தள்ளப்படுகிறார்கள். அவர்களுக்குச் செயலூக்கம் எப்படிக்கிட்டும்? சோர்வுதான் மிஞ்சும்.

***

கடுமையான, நேர்மையான உழைப்பு, இந்தியத் திருநாட்டில் மதிப்பிழந்து போய்விட்டது என்பதற்கு, நாட்டுக்கு உணவளிக்கின்ற உழவுத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள இன்றைய சீர்கேடு மிகப்பெரிய எடுத்துக்காட்டாக உள்ளது. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற நிலைமை அண்மைக்காலம் வரை நிலவி வந்தது. இன்றோ, அது தலைகீழாக மாறிவிட்டது. 'உழுதுண்டு வாழ்வாரே தாழ்வார்' என்றாகிவிட்டது. வேளாண் இடுபொருள்களின் விலை உயர்வு போன்ற பலகாரணங்களால், வேளாண்மைக்கு ஆகும் செலவு பன்மடங்காக உயர்ந்துள்ளது. உழவர்கள் விளைவிக்கும் உணவுப்பொருள்களின் விலை அந்தளவு உயரவில்லை. உணவுப்பொருள்களின் விலையை நிர்ணயிப்பவர்கள் உழவர்களல்லர்; இடைத்தரகர்களே. 70 கிலோ கொண்ட ஒரு நெல் மூடையை ரூ.300 என்று உழவர்களிடமிருந்து வணிகர்கள் வாங்கிக் கொண்டு, ஒரு கிலோ அரிசியை ரூ.15-20 என்று விற்கிறார்கள்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடுபவர்கள் உழவர்கள். அவர்தம் உழைப்பின் பயனைப் பெற்றுக் கொள்பவர்கள் இடைத்தரகர்கள். உழவர்களின் உழைப்பு இவ்வாறு சுரண்டப்படுவதை ஆட்சியாளர்கள் கண்டுகொள்வதில்லை.

'கடமையைச் செய்யத்தான் உனக்கு உரிமையுண்டு; அதன் பயனை நீ எதிர்பார்க்கக் கூடாது' என்கிற கீதாசிரியனின் போதனையைக் கடைப்பிடித்து இந்தப் பாழும் உழவர்கள் எவ்வளவு காலந்தான் தாக்குப்பிடிக்க முடியும்? பெருமித உணர்வுடன் உழைக்கும் இயல்புடைய உழவர் பெருமக்கள் சிறுமைப்படுத்தப்படுவதால், அவர்களது திண்ணிய மனமும் வலுவிழந்து வளைந்துவிட்ட நிலையைத்தான் இன்று காண முடிகிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் உழவர்கள் யாரிடமும் சென்று இரந்து நிற்க மாட்டார்கள். இரப்பவர்களுக்குத் தாராளமாகக்

கொடுத்து மகிழ்வார்கள். விருந்தோம்பலை அவர்கள் மிகவும் விரும்பி மேற்கொள்வார்கள். முன்பின் அறியாத வழிப்போக்கர் எவரும் வீட்டு வாயிலில் வரக்கண்டால், அவருக்கு வயிராற உணவு படைத்து, உண்ணச் செய்தே அனுப்புவார்கள். அவர்கள் பொய் பேசமாட்டார்கள். கள்ளத்தனம் அவர்களை அண்ட முடியாது. எப்போதும், எந்த நிலையிலும் வேலைக்கு வஞ்சகம் செய்யமாட்டார்கள். இயற்கையோடு இயைந்து வாழ்பவர்கள் அவர்கள்.

இந்தப் பண்புகளெல்லாம் உழவர்களிடையே இன்று மங்கி மறைந்து போனதையே காண்கிறோம். இவர்களுடைய மனம் கோணலாகி விட்டது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் எழுபது விழுக்காட்டு மக்களின் மனம் கோட்டம் உற்றுவிட்டது எனும்போது, இந்த நாடு கோணலுற்று ஊழல்மயமாகிவிட்டது என்பதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

★★★

அண்ணல் காந்தியடிகளின் அறவழிப் போராட்டம் நம் நாட்டுக்குத் தன்னுரிமையைப் பெற்றுத் தந்தது. ஆனால், தன்னுரிமை பெற்ற இந்தியத் திருநாடு காந்தியடிகளின் பொருளியக் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டது.

1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர், நாட்டின் எதிர்காலம் பற்றிய கவலை காந்தியடிகளைச் சூழ்ந்து கொண்டது. அதுவரை அவரது காலடியில் இருந்துவந்த காங்கிரஸ் பேரவைத் தலைவர்களிடம், காந்தியடிகள் உலகளாவிய செல்வாக்கு 1947 ஆகஸ்ட்டுக்குப் பின்னர் செல்லுபடியாகவில்லை.

அதிகாரிகளின் ஆர்ப்பாட்டம், பதவிச் சலுகை, ஊழல், லஞ்சம், கள்ள வாணிகம், கொள்ளை லாபம் - இந்தத் தொல்லைகளெல்லாம் சுதந்திர இந்தியாவில் மிகுந்து வருவதாகக் கிருபளானி மனம் வருந்திக் கூறினார். காந்தியடிகள் சோர்வுடன் இதற்குப் பதிலளித்தார். ''ஊழல் இன்று பெருகியுள்ளது. இதைக் காணும்போது எனக்கு அச்சம் உண்டாகிறது. மக்களின் வாக்குகளால் அதிகாரம் கிடைக்கிறது. எனவே ஏராளமான வாக்குகளைத் தங்கள் பைகளில் சேகரித்துக்கொள்ள வேண்டும் என்றே ஒவ்வொருவரும் ஆசைப்படுகிறார்கள்''.

காங்கிரசுத் தலைவர்களுக்குக் காந்தியடிகள் கூறிய அறிவுரை : அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணத்தை உங்கள் மனத்திலிருந்து

விரட்டிவிடுங்கள். அப்போதுதான் அதிகாரிகளை நீங்கள் வழிநடத்திச் செல்ல முடியும்... சுதந்திரம் பிறந்தவுடன் அதன் மென்னியை நெரித்துக் கொன்றுவிடுவது போல் அச்சுறுத்திக் கொண்டுள்ள ஊழலைக் களைய வேறுவழி எதுவும் இல்லை''.

அதிகாரத்துக்கு அவாவி நிற்காமல், பொதுநலத் தொண்டில், ஆக்க வேலைகளில் காங்கிரஸ் கட்சி ஈடுபட வேண்டும் என்பது அவரது உள்ளக்கிடக்கை. *அண்ணல் காந்தியடிகள் ஒரு மாமனிதர். அவரால்* அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் வெறும் அரசியல்வாதிகளே! அதிகாரத்தைப் பெறுவதற்குக் காந்தியார் தேவைப்பட்டார். அதிகாரம் கிடைத்த பின்னர், காங்கிரஸ் தலைவர்களுக்குத் தேவையற்ற முட்டுக்கட்டையாக (Stumbling Block) அவர் தோன்றலானார். இதுதான் காலத்தின் கோலம் போலும்!

சுதந்திரம் பெற்றவுடன், இந்தியாவில் காந்தியப் பொருளாதாரக் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டிருந்தால், பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கமாட்டார்கள். உழைக்காமல் வளமான வாழ்க்கை வாழ்பவர்களிடம் மென்மேலும் செல்வம் சேர்வதற்கும், பெரும்பான்மையான உழைக்கும் மக்கள், அடிப்படைத் தேவைகளுக்கே அல்லாடி உழல்வதற்கே சுதந்திர இந்தியாவின் பொருளாதாரச் செயல்பாடுகள் வழிவகுத்தன. குறுக்கு வழியில் பொருள்சேர்ப்பவர்கள், ஊழலின் ஊற்றுக் கண்களாக வாழ்பவர்கள் போன்றோரின் கட்டுப்பாட்டிலேதான் அரசுகள் இயங்கி வருகின்றன என்ற மெய்மை நிலை, உண்மையான காந்திய வாதிகளை நோகடிக்கவே செய்யும்.

***

இந்திய மக்கள் தொகையில், இன்றைய நிலையிலும் எழுபது விழுக்காடு மக்கள் உழுதொழிலையே மேற்கொண்டுள்ளனர். இந்தியாவின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இந்த 70 விழுக்காட்டு மக்கள் வாழ்வுக்கென ஒதுக்கப்படும் நிதியளவு மொத்த ஒதுக்கீட்டில் 15 விழுக்காடுதான். நாட்டின் முதுகெலும்பாக உள்ள உழவர்கள், தொழிலாளர்கள் தொடர்ச்சியாகப் புறக்கணிப்புக்கே ஆளாகின்றனர். அவர்களது உழைப்பு தங்குதடையின்றிச் சுரண்டப்படுகிறது. இதனால் உழுதொழில் ஊக்கம் குறைந்து, உழுதொழிலைக் கைவிட்டு, உழவர்கள் *நகர்ப்புறங்களை நாடிச்செல்கின்றனர். கடினமாக உழைக்காமல் எளிதாகப்*

பொருளீட்டி வளவாழ்வு வாழ்ந்துவிடலாம் என்றுள்ள இன்றைய நகரியச் சூழல், அவர்களைக் கவர்கிறது. அவர்களது மனக்கோட்டத்தின் வெளிப்பாடுதான் இது.

உழவர்களால் கைவிடப்படும் நிலப்பரப்புகள் தரிசு நிலங்களாக, மண்ணரிப்புக்கு இலக்காகி, எதற்கும் பயன்படாத பாழ்நிலமாக (Wasteland) மாறிவருகிறது. இதனைக் கண்ணுற்ற வள்ளுவர்,

*செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து*
*இல்லாளின் ஊடி விடும்.* - *குறள் : 1039*

என்று நயம்படக் கூறுகிறார். நிலமகளை அதன் உரிமையாளன் (கிழவன்) அடிக்கடி சென்று, அன்புடன் நோக்கி அரவணைக்காவிட்டால், நிலமகள் (இல்லத்தரசிபோல்) அவனுடன், பிணங்கி, ஊடலுற்று, அவனுக்கு விளைச்சலை ஈனமாட்டாள். விளைவற்ற நிலமகள் பாழ்பட்டுச் சீரழிந்து காலப்போக்கில் பாலையாக நிலைமாறிப் போவாள். உலகெங்கும் பாலை நிலப்பரப்புகள் விரிந்து பரவி வருவதற்கு இது ஒரு முக்கியக் காரணம். வளமான விளைநிலம் பாலையாகிப் பாழ்பட்டுப் போகின்ற அதே போழ்து, அந்நிலத்துக்கு உரியவனாக இருந்தவன், உழுதொழிலுக்கேயுரிய விழுமியங்களையெல்லாம் இழந்து, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை என்பதெல்லாம் பழங்கதையாகிவிட, கூனிக்குறுகிப்போய், எப்படியும் வாழலாம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகிறான்.

**ஊழலை அடக்கி ஒடுக்க சில வழிமுறைகள்**

நாடெங்கும் பரவி விட்டுள்ள ஊழல் என்ற பெருநோயை, இன்றைய நிலையில் அடக்கி ஒடுக்கி ஒரு கட்டுக்குள் கொண்டுவர இயலுமா என்பது ஒரு பெரும் கேள்விக்குறியே. என்றாலும், 'முயற்சி திருவினை ஆக்கும்' என்ற நம்பிக்கையுடன், நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் உடைய சான்றோர்கள் ஒருங்கிணைந்து, சிந்தித்துப் பார்த்து, விரிவான செயல்திட்டம் ஒன்றை வகுத்துக் கொண்டு முயன்று பார்க்கலாம். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற பொன்மொழி நம்பிக்கை தரும். சான்றோர் சிந்தனைக்குக் கீழ்க் குறித்த வழிமுறைகள் முன்மொழியப்படுகின்றன.

1. நாட்டுமக்களின் மதிப்பீட்டுணர்வு (Sense of value) சீராக வேண்டும். பெரும்பாலான மனிதர்கள் தம் வாழ்நாள் முழுவதும் 'பணம் பணம்' என்ற

வெறியுடன் அலைகின்றனர். கோடி கோடியாகப் பணம் சேர்த்தவர்களும், ஆரவாரப் புகழுடன் வாழ்பவர்களும் தம் இறுதி மூச்சின்போது மனநிறைவுடன் வாழ்ந்து முடித்ததாக உணர்வார்களா என்றால், 'இல்லை' என்றுதான் கூறவேண்டி வரும். ஒருவர் சேர்த்து வைக்கும் பொருள்கள், புகழ் ஆரவாரங்கள் யாவும் அவரது 'நான்', 'எனது' என்ற தன் முனைப்பை மலையளவு உயர்த்திவிடுகிறது. அவரது இறுதி மூச்சின்போது அதே மலையளவு ஏமாற்றம் அல்லது தோல்வி எனும் வீழ்ச்சியை அவர் உணர்கிறார். இதுவே மெய்மைநிலை.

மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குப் பொருள் தேவைதான். பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை என்பது மெய்யே. ஆனால், பிறப்பெடுத்து வாழ்வதே பொருள் சேர்ப்பதற்குத்தான் என்பது போல் வாழ முற்படுவது தவறான வாழ்வியலாகும். தேவைக்கு அதிகமாகப் பொருள் சேர்ப்பது மனித வாழ்க்கையில் சுமையாகவே அமையும். இந்த உண்மையைப் பள்ளிச் சிறார்களுக்கு உரிய முறையில் உணர்த்தும் வண்ணம் பள்ளிப்பாடத்திட்டம் வகுக்கப்பட வேண்டும். மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்திட அவனுடைய ஒழுகலாறுகள் எவ்வாறு அமைய வேண்டும், அந்த வாழ்வில் பணத்துக்கு உரிய இடம், எவ்வளவு, வினைத்தூய்மை, வினைத்திட்பம், மெய்யுணர்தல் போன்ற வாழ்வியல் கூறுபாடுகள் மனித வாழ்க்கையை எப்படியெல்லாம் மேம்படுத்தும் என்று சிறுவர்கள் மனத்தில் பதிய வைக்க வேண்டும். சின்னஞ்சிறு வயதில் சரியான மதிப்பீட்டுணர்வைப் பெறுகின்ற குழந்தைகள், வளர்ந்து பெரியவர்களாகி வாழ்வை எதிர்கொள்ளும்போது, பொருளியல் செயல்பாடுகளில் தவறு செய்யமாட்டார்கள்.

'பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும்' மயக்கத்தை மக்களிடமிருந்து அகற்றுவதற்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், எழுத்தாளர்கள், சான்றோர்கள் என்று பலதிறத்தாரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். நடுவணரசிலுள்ள மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் இந்தக் கருத்துப் பரவலுக்கு (Propaganda) உரிய நிதியை ஒதுக்கி ஊக்கமளிக்கலாம். அண்மையில் வாழ்ந்து மறைந்த மெய்ப்பொருளறிஞர் ஜே.கிருஷ்ணமூர்த்தி, வள்ளுவப்பேராசான், அண்ணல் காந்தியடிகள் போன்ற நிறைமொழி மாந்தர்தம் மறைமொழிகள், இக்கருத்துப் பரவலுக்கு உறுதுணையாக விளங்கும்.

2 ஊழல் புரிபவர்கள் சமுதாயத்தின் கண்டனத்துக்கும் புறக்கணிப்புக்கும் ஆளாகும் வண்ணம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் நடிகர்களுக்கு மன்றங்கள் அமைக்கும்

பேதைமைக்கு விடைகொடுத்துவிட்டு, டாக்டர். எம். எஸ். உதய மூர்த்தியின் 'மக்கள் சக்தி இயக்கம்' போன்ற ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு இயக்கங்களை நம் நாட்டு இளைஞர்கள் நாடெங்கும் உருவாக்கி எழுச்சியுடன் செயல்படுவதற்குச் சான்றோர்களும், ஆன்றோர்களும் வழி வகுக்கலாம். ஊழல் செயல்பாடுகளுக்கு எதிராக மக்களிடையே முகிழ்த்தெழும் விழிப்புணர்வு, ஊழல்வாதிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றலாக அமையும்.

3. தம்மையே வருத்திக் கொண்டு, நிலம் திருத்தி பாடுபட்டு, உணவுப்பொருள்களை விளைவிக்கும் உழவர் பெருமக்கள், அவர்தம் உழைப்புக்கேயுரிய நல்லியல்புகளுடன் வாழுகின்ற வெற்றியை மீண்டும் பெறுமாறு செய்தல் வேண்டும். உலகுக்கு அச்சாணி போன்ற அவர்களின் பெருமிதமான இடத்தை (Status) உழவர்கள் பெறுமாறு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருப்பெற வேண்டும். அவர்கள் விளைவிக்கும் உணவுப்பொருள்களின் விலையை அவர்களே வரையறுத்துக் கொள்ளும் வண்ணம் சட்டம் இயற்றப்பட்டு, இடைத்தரகர்கள் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்.

4. நாடெங்கும் பரவலாக அதிகமான மக்களுக்கு வேலை வாய்ப்பைத் தரக்கூடிய தொழில்களுக்கு முன்னுரிமை தந்து அவற்றைக் கிராமப் புறங்களில் நிறுவினால், கிராம மக்கள் நகரங்களை நோக்கி நகர்ந்து செல்வதைத் தடுக்கலாம். இதற்குக் காந்தியப் பொருளாதாரக் கொள்கையே ஏற்றதாகும்.

காந்தியடிகளின் கருத்துக்கு மாறாக, பண்டித நேரு, கனரகத் தொழில்களுக்கே முன்னுரிமை தந்தார். சுதந்திர இந்தியாவில் செய்யப்பட்ட இமாலயத் தவறு இது. அமெரிக்கப் பொருளியல் வல்லுநரும் மேலாண்மையியல் அறிஞருமான 'பீட்டர் எஃப் டிரக்கர்' (Peter F. Drucker) என்பார் இந்தியப் பொருளாதார நடவடிக்கைகளை ஆய்வு செய்து இவ்வாறு கருத்தை வெளியிட்டார்:

''1960களில், இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளுக்கு இந்தியா தனது அரிய மூலதனத்தைக் கொட்டியது. அத்தொழிற்சாலைகள் 1970களிலும் 80களிலும் வெள்ளை யானைகளாக ஆயின. இந்தியா போன்ற நாடுகளுக்கு இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் பொருத்தமற்றவையாகும். இவை வேலை வாய்ப்பை அதிகரிக்கக் கூடியவையல்ல. இத்தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களைத் தவிர, வேறு எந்தச் சார்புத் தொழில்களையும் இவை ஏற்படுத்துவதில்லை. மேலும் இத்தொழிற்சாலைகளில் உற்பத்தி

செய்யப்படும் பொருள்கள் உலகச் சந்தையில் அவ்வளவாக விலைபோவதுமில்லை. ஏனெனில், மற்ற பல நாடுகள் இப்பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்க முன்வருகின்றன''.

அண்ணல் காந்தியடிகளின் கிராமிய வளர்ச்சிக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறாகவே பண்டித நேருவும் அவருக்குப் பின் வந்த ஆட்சியாளர்களும் செயல்பட்டனர். நாட்டின் பொருளியலைப் பெரும்பான்மையான மக்களுக்குப் பாதகமாகவே கையாண்டனர். இனிமேலாகிலும், சரியான பாதையை நாம் கண்டுகொள்ள வேண்டும். சிறுதொழில்களுக்கும் அதிகமானவர்களுககு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய தொழில்களுக்கும் முன்னுரிமை தரவேண்டும்.

5. மத்திய மாநில அரசுகளின் ஆண்டுவரவு செலவுத் திட்டத்தில் வளர்ச்சிப் பணிகளுக்கென ஒதுக்கும் நிதியில், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கிராமப்புறங்களில் வாழுகின்ற 70 விழுக்காடு மக்களின் வளர்ச்சிக்காக 50 விழுக்காடு நிதியையாவது ஒதுக்க வேண்டும்.

மக்கள் தொகையை விழுக்காட்டிற்கேற்ப வளர்ச்சி நிதி ஒதுக்கீட்டை, 1947-ம் ஆண்டிலிருந்து நாம் செய்திருந்தோமானால், கங்கை-காவிரி இணைப்புத் திட்டமும் கூட இதற்குள் நிறைவேற்றப்பட்டிருக்கும். நாடு தன்னிறைவு பெற்றிருக்கும். அந்நிய நாடுகளிலிருந்து பெறவேண்டி வந்த இலட்சக்கணக்கான கோடி ரூபாய் கடன் சுமையை நாம் தவிர்த்திருக்கலாம். தன்னிறைவு பெற்ற நிலையில், வல்லரசாக இந்தியா உயர்வதும் எளிதாகியிருக்கும்.

''நெற்கதிர் என்னும் குடைநிழலையுடைய உழவர் பெருமக்கள், தம்குடையின் கீழே ஆட்சியாளர்களின் பற்பல குடைகளும் நிழல் செய்யக் கண்டிருப்பர். உழவர் வளத்தில், அரசின் வளமும் அமைந்து நிற்கும்''.

*பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்*
*அலகுடை நீழ லவர்* — *குறள் - 1034*

**முடிப்புரை:**

**'சமுதாயம் மாறவேண்டும் என்றால் தனி மனிதன் தன்னளவில் மாறவேண்டும். ஒரிருவர் மாறிவிடுவதால் ஒட்டுமொத்த சமுதாயம் மாறுமா? மாறும். சமுதாயம் வேறு, நீ வேறு என்பதில்லை நீயே சமுதாயம், சமுதாயமே நீ. உன்னுள் ஏற்படும் மாற்றம், சமுதாயத்தை நீ பார்க்கும் பார்வையை மாற்றிவிடுகிது' என்றவாறு ஜே. கிருஷ்ணமூர்த்தியின் போதனை அமையும்.**

தனிமனிதனின் உயர்ந்த எண்ணங்கள் சமுதாயத்தையே சீராக்கும் வல்லமை படைத்தவை என்று உளவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். உண்மையான காந்தியவாதிகளும், ஜே. கிருஷ்ணமூர்த்தி அன்பர்களும், திருக்குறள் ஆர்வலர்களும், 'நாட்டுமக்கள் தூய்மை போற்றி வாழவேண்டும், அதற்கு முன் நாம் தூய எண்ணங்களை நம்முள் ஊறவைப்போம், தூய எண்ணங்களை சமுதாயத்தில் விதைத்து வைப்போம்' என்று உறுதிகொள்ள வேண்டும்.

'மனித வாழ்வில் ஆக்கமும் கேடும் இல்லாத நிலை என்பது இல்லை. ஆகவே சான்றோர் நெஞ்சத்தில் 'கோடாமை', நிலை பெறுவதே அழகாகும்' என்றும்,

'சிறிதும் நல்லெண்ணம் இல்லாமல் பிறர் பொருளைப் பெற வேண்டும் என்று ஒருவர் விரும்பினால், அஃது அவருக்கு அழிவைத் தரும்; பிறர்பொருள் தேவையில்லை என்ற பெருமித உணர்வு வெற்றியை நல்கும்' என்றும்,

'தன்னுடைய தேவை எவ்வளவு, திறமை எவ்வளவு, என்ற அளவீட்டை அறிந்துகொண்டு வாழ்பவர்களின் நெஞ்சத்தில் அறம் வீற்றிருக்கும்; அதுபோல், களவு செய்து பழகி அறிந்தவர் நெஞ்சில், 'வஞ்சம்' நிலைத்து நிற்கும்' என்றும்,

'பொருள் சேர்க்கும் திறம் அறிந்து, தீயவழிவிடுத்து நல்ல வழியில் தேடிப்பெறுகின்ற பொருள், ஒருவர்க்கு அறத்தையும் கொடுக்கும்; இன்பத்தையும் கொடுக்கும், அவர் முழுமையான வாழ்க்கை வாழ இயலும்' என்றும்,

வள்ளுவப்பேராசான் வழங்கியுள்ள கருத்துக்களைக் குறளன்பர்கள் தம் உள்ளத்தில் இருத்திக்கொண்டு, மக்கள் மன்றத்தில் அவற்றை விதைத்துவர வேண்டும்.

நல்ல எண்ணங்களுக்கு அளவற்ற ஆற்றல் உண்டு. நாட்டு மக்கள் மனங்களில் அவை மெல்ல மெல்லக் குடியேறும்; தூய்மை போற்றி வாழ மக்களை ஆற்றுப்படுத்தும்.

ஜேம்ஸ் ஆலன் எனும் அறிஞர், தமது 'ஆத்ம தரிசனம்' எனும் நூலில் கூறுகிறார்.

*வாருங்கள், வந்து பாருங்கள்*
*தூய்மையின் குறுகலான பாதை,*
*எவ்வளவு நேரானது என்பதைப் பாருங்கள்!*

*வாருங்கள், வந்து உணருங்கள்,*
*நேர்மையின் சட்டம் எவ்வளவு எளியது,*
*எவ்வளவு அற்புதமானது என்பதை!*
*தூய்மையின் பாதையில் நடப்பது*
*எளிதானது; இனிமையானது.*

**பார்வை நூல்கள் :**


1. திருக்குறள் தெளிவுரை, டாக்டர் மு. வரதராசனார், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-108.
2. திருக்குறள் வாழ்வியல் உரை, மதுரை இளங்குமரனார், குறளாயம், 3, மண்டபம் வீதி, ஈரோடு-1.
3. மகாத்மா காந்தி வாழ்க்கை, லூயி ஃபிஷர், தமிழாக்கம், தி.ஜ.ர. பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14.
4. ஜேம்ஸ் ஆலனின் ஆத்ம தரிசனம், தமிழில் கவிஞர் புவியரசு, கண்ணதாசன் பதிப்பகம், சென்னை-17.
5. Management Philosophy of Thiruvalluvar in Public Administration K.C. Agamudai Nambi, Vanji Malar, 2/402, Anbunagar, Madurai-20.
6. The Changing World of the Executive, Peter F.Drucker, William Heinmen Limited, London.

# திருவள்ளுவரும் அரசுநெறி இயக்கக் கோட்பாடுகளும்

-பேரறிஞர் பா. சூரிய நாராயணன்

**முன்னுரை :**

''நல வாழ்வு'' என்பது மனிதனுக்கு இயல்பாக இருக்கக்கூடிய ஒரு நோக்கம் ஆகும். இந்த நோக்கமே ஆட்சியாளரை (அல்லது அரசை) இயக்கும் நெறியாக அல்லது கோட்பாடாக எல்லா நாகரீக நாடுகளிலும் அமைந்துள்ளது. நலவாழ்வு என்ற இயல்பை எடுத்துக் காட்டுபவையே நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாகம் பிரிவுகள் 36 முதல் 51 வரை கூறப்பட்டுள்ள அரசு நெறி இயக்கக் கோட்பாடுகள் (Directive Principles of State Policy) ஆகும். நலவாழ்வு என்ற இயல்பு அல்லது நோக்கமும் நலஅரசு (Welfare State) என்ற ஓர் சமுதாய அமைப்பின் வாயிலாகத்தான் செயல்படுத்தப்படுதல் கூடும். நலவாழ்வென்னும் இயல்பை ஆதாரமாகத் தம் கருத்தில் வைத்தே ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் வாழ்ந்த தமிழ்ச் சிந்தனையாளர் திருவள்ளுவர் தமது ஒப்பற்ற நூலில் அரசியல் என்னும் பிரிவில், பல குறட்பாக்களில் ஆட்சியாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளையும், அவருக்கு இருக்கவேண்டிய நற்பண்புகளையும் எடுத்துக் கூறுகிறார்.

**2. நலவாழ்வும் அரசின் இயல்பும் :**

நலவாழ்வு என்னும் குறிக்கோள்தாம் அரசின் இயல்பையே உருவாக்குகிறது. ''ஆளுவோர் பொதுநலனுக்கு உகந்தவற்றைச் செய்யும்பொருட்டு அதிகாரத்தைச் செலுத்தும்வரை அவருடைய ஆட்சி தூய்மையான ஆட்சியாக (future form of government) இருக்கும். மாறாக, ஆளுவோர் வரம்புமீறி, பொதுநலனைப் புறக்கணித்து அரசியல் நோக்கம் ஒன்றையே அதாவது ஆட்சி அதிகாரத்தைத் தம்கையகத்தே வைத்திருக்கும் நோக்கம் ஒன்றையே கருத்தில் கொண்டு தன்னலத்தோடு செயல்படுவாராயின், அவருடைய ஆட்சி தூய்மை கெட்டு, சிதைந்த ஆட்சியாக (currupt form of government) மாறி மக்கட்கு இடர்பாட்டைத் தரும். வரம்பிகந்த போக்கின் காரணமாகப் பொதுநல நோக்குடைய தூய மன்னராட்சி (Monarchy), தன்னலமிக்க சருவாதிகார ஆட்சியாகவும் (Tyranny), உயர்குடியாளராட்சி (aristo-cracy), செல்வராட்சியாகவும் (oligarchy), மக்களாட்சி (Democracy), தன்னலமிக்க சருவாதிகாரக் கும்பல்

ஆட்சியாகவும் (Ochlocracy) பண்டைய கிரேக்க நகரரசாகிய ஆதென்சில் வடிவமெடுத்தது'' என்று அதினிய அரசியலறிஞர் அரிஸ்ட்டாட்டில் ஆராய்ந்து கூறுகிறார். ஆளுவோர் பரம்பரை அடிப்படையில் அதிகாரத்தைப் பெற்றவராயினும், அல்லது உயர் குடிப்பிறப்பினடிப்படையில் அதிகாரத்தைப் பெற்றிருப்பினும், அல்லது வாக்களிக்கும் குடிமக்களின் பெரும்பான்மை ஆதரவினடிப்படையில் அதிகாரத்தைப் பெற்றிருந்தாலும், அவர் பொதுநலன் என்ற வரம்பைமீறி, தன்னலன் ஒன்றையே கருதிச் செயல்படுதல் கூடாது; ஆளுவோர் வாழ்க்கையைத் துய்ப்பதிலும், அதிகாரத்தைச் செலுத்துதலிலும் வரம்பு மீறிய போக்கைத் தவிர்த்து, வரம்புக்கு உட்பட்ட அதாவது பிறர்நலத்தைக் காப்பாற்றுதற்குகந்த போக்கை மேற்கொண்டு, வாழ்க்கையைத் துய்த்தலும் அதிகாரத்தைச் செலுத்துதலும் வேண்டும். இதுவே அரிஸ்ட்டாட்டிலும் (கி.மு. 384 - கி.மு. 322), அவருடைய ஆசிரியராகிய பிளேட்டோவும் (கி.மு. 428 - கி.மு. 347) எடுத்துக்கூறும் 'வரம்புக்கு உட்பட்ட உரிமை உணர்வு' என்னும் கிரேக்கருடைய தலைசிறந்த அரசியற் பண்பாடு (Greek sense of Moderation) ஆகும். ''சிறந்த அல்லது இலட்சிய ஆட்சியாளர் என்போர் அளவுக்கு மீறிய அதிகாரப்பற்று, பொருட்பற்று, இன்பநாட்டம் முதலிய பெருங்குறைகளினின்றும் நீங்கியவராகவும், பொதுநலனைக் கருதுபவராகவும் இருத்தல் வேண்டும்; ஒவ்வொருவரும் தத்தம் இயல்புகளையும், தெளிவாக உணர்ந்து அவற்றுக்கேற்ற தொழிலைச் செய்து, மற்றவருடைய தொழிலில் தலையிடாமலிருக்கும் வரை அரசில் மக்களுக்கு நீதியும் (Justice) நிறைவும், இன்பமும் இருக்கும். இதற்கு ஏற்றவழி வரம்புக்கு உட்பட்ட உரிமை உணர்வே ஆகும்'' என்பது பிளேட்டோ கூறும் அரசியற் கருத்து ஆகும். கிரேக்கருடைய வரம்புக்குட்பட்ட உரிமை உணர்வு என்ற கருத்து வள்ளுவருடைய சிந்தனையில் காணப்படுகிறது.

*''சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்பது அறிவு''* *(அறிவுடைமை, 422)*

சிறந்த கல்விப்பயிற்சியினால் கிடைக்கும் அறிவு ஒருவருக்கு வரம்புக்குட்பட்ட உரிமை உணர்வைத் தோற்றுவித்து, அவ்வுணர்வு அவரை நல்வழியில் செலுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**3. அரசுநெறிக் கோட்பாடுகளும் வள்ளுவர் கருத்துக்களும் :**

1. அரசு நெறிக் கோட்பாடு 38-ஆம் பிரிவு, ''தேசிய வாழ்வின் எல்லா நிறுவனங்களிலும் சமூக நீதியும், பொருளாதார நீதியும், அரசியல் நீதியும் பாதுகாக்கப்படும் பொருட்டு அரசு மக்களுடைய நல்வாழ்வைச்

சீர்ப்படுத்துதல் வேண்டும்'' என்று கூறுகிறது. இந்தக் குறிக்கோளை அடைதற்கு, ஆட்சியாளர், குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்தல் வேண்டும், தாமும் அவரை வருத்தாமல் காத்தல் வேண்டும். குற்றம் செய்தவர்களைத் தக்க தண்டனையால் திருத்துதல் வேண்டும். இதனை வள்ளுவருடைய,

*''குடிபுறம் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல்*
*வடுவன்று வேந்தன் தொழில்''* *(செங்கோன்மை, குறள்:549)*

என்ற குறள் சுட்டிக் காட்டுகிறது.

2. 'நலவாழ்வு, நீதி ஆகியவை யாவருக்கும் கிடைத்தல் வேண்டும்' என்ற குறிக்கோளை அடைதற்கு அரசு செய்யவேண்டிய செயல்களை கோட்பாடு 39 குறிப்பிடுகிறது.

அ) நலவாழ்வுக்காக ஆண், பெண் அனைத்துக் குடிமக்கட்கும் வேறுபாடின்றிப் போதிய வாழ்க்கை வசதிகள் கிடைக்குமாறு செய்தல் வேண்டும்.

ஆ) நாட்டின் செல்வ வளமெல்லாம் பொதுநலனுக்கு ஏற்பப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

இ) உற்பத்திச் சாதனங்களும், செல்வமும் பொதுநலனுக்குக் கேடு உண்டாக்கக்கூடியவாறு ஒரு சிலரிடத்தில் குவிந்துவிடாதபடி தடுக்கும் பொருட்டு, பொருளாதார அமைப்பு இயக்கப்படுதல் வேண்டும்.

ஈ) ஆண், பெண் அனைவருக்கும் வேறுபாடின்றி ஒரேமாதிரியான பணிக்கு ஒத்த அல்லது சமமான ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

உ) முதியோருக்கும் குழந்தைத் தொழிலாளருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.

ஊ) குழந்தைகளும், இளையோரும் ஒழுக்கமுறையிலும், வாழ்வியலிலும் தாழ்ந்து சிதைவுறாமலிருத்தற்கு ஆவன செய்யப்படுதல் வேண்டும்.

(அ) ஆட்சியாளர் பொருள்வரும் வழிகளை மேன்மேலும் இயற்ற, அதாவது உண்டாக்க வேண்டும். (ஆ) உண்டாக்கப்பட்ட பொருள்களை ஆட்சியாளர் சேகரித்து வைத்தல் வேண்டும். (இ) பின்னர் அப்பொருள்களை ஒரு சிலர் கைக்கொள்ளாதவாறு, ஆட்சியாளர் அவற்றைக் காத்து, யாவருக்கும் கிடைக்குமாறு வகுத்துச் செலவு செய்தல் வேண்டும். இக்கருத்துக்களை

*"இயற்றலும், ஈட்டலும், காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"* *(இறைமாட்சி, 385)*

என்ற குறளில் வள்ளுவர் கூறுகிறார். (ஈ) ஆளுவோர் முறை வேண்டியவர்களுக்கும் அதாவது வலியரால் நலிவு எய்தியவர்களுக்கும், (உ) (ஊ) வறுமையுற்று இரந்தவர்களுக்கும் (திக்கற்றவர்களுக்கும்), அவர்கள் தம்மை அணுகித் தங்களுடைய குறைகளைத் தெரிவித்து நல்ல தீர்வுகளைப் பெறுவதற்கு உதவியாக இருத்தல் வேண்டும். திக்கற்றவர்களுக்கு ஆளுவோர் காட்சிக்கு எளியராயிருத்தல் வேண்டும், அவரிடத்துக் கடுஞ்சொல் கூறலாகாது. இக்கருத்துக்களைக் கூறும் குறட்பாக்கள்:

*"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"* *(386)*

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"* *(388)*

*"கொடை, அளி, செங்கோல், குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி"* *(390)*

இக்குறட்பாக்களுக்குப் பரிமேலழகர் கூறும் விளக்கங்களில் நல்வாழ்வுக் கருத்துக்கள் தெளிவாகக் காணப்படுகின்றன; ஆட்சியார் அறநூலில் விதிப்பதற்கு ஏற்ப, சட்டத்துக்கு ஒப்ப நீதிவழங்குபவராக (முறைசெய்பவராக) மட்டும் இருந்தால் போதாது; அவர், மக்கள் நலிவடையாமல் வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுத்து, தலை அளி செய்து, அதாவது முகமலர்ந்து இனியவை சொல்லி, தளர்ந்த குடிகளை - முதியோர், குழந்தைகள் ஆகியோரைப் பேணுபவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) பிரிவு 41,

''எல்லாருக்கும் வேலைப்பாதுகாப்பும், கல்வியும், வேலை இல்லாநிலையிலும், முதுமையிலும், நோயிலும், ஊனமுற்ற நிலைமையிலும், உதவியும் கிடைக்குமாறு அரசு செய்தல் வேண்டும்.'' என்றும்,

(4) பிரிவு 42,

''மனிதப்பற்றுக்கு ஒத்த வேலைச்சூழ் நிலைகளும், குழந்தைப்பேறு காலத்து உதவியும் கிடைக்குமாறு அரசு செயல்படுதல் வேண்டும் என்றும் கூறுகின்றன.

(தொடரும்)

**எழுத்து - நூல் மரபு**

*முன் இதழ்த் தொடர்ச்சி...*

## (நெட்டெழுத்து)

***சூத்திரம் 4***

*ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ - ஔ என்னும்*
*அப்பால் ஏழும்*
*ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப.*

**(ப-ரை)**

ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என்னும் -ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என்று கூறப்படும். அப்பால் - அப்பகுதியன ஆகிய, ஏழும் - ஏழு எழுத்துக்களும், ஈரளவு - இரண்டு மாத்திரை, அளவு இசைக்கும் - அளவாக ஒலிக்கும், நெட்டெழுத்து - நெட்டெழுத்துக்கள், என்ப - என்பர் இலக்கண நூலார்.

ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ ஆகிய ஏழு உயிர் எழுத்துக்களும் இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும் நெட்டெழுத்துக்களாம்; உயிர் நெடில்களாம்.

***சூத்திரம் 5***

*மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்றே*

**(ப-ரை)**

ஓர் எழுத்து - ஓர் எழுத்து மட்டில் தனித்து நின்று, மூவளவு இசைத்தல் இன்று - மூன்று மாத்திரை அளவு ஒலித்தல் இல்லை.

தமிழில் எந்த ஓர் எழுத்தும் தனிநின்று மூன்று மாத்திரை ஒலிக்காது.

***சூத்திரம் 6***

*நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய*
*கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்.*

**(ப-ரை)**

நீட்டம் வேண்டின் - இரண்டு மாத்திரையுடைய நெட்டெழுத்து. அம்மாத்திரையைவிட மிகுந்து ஒலிக்கவிரும்பினால், அவ்வளபு உடைய

- தாம் கருதிய மாத்திரை தருதற்கு உரிய எழுத்தை, கூட்டி எழூஉதல் - கூட்டி அம்மாத்திரையை எழுப்புக, என்மனார் புலவர் - என்று கூறுவர் இலக்கண நூலாசிரியர்.

நெட்டெழுத்துக்களே அளபெடுக்கும்; குற்றெழுத்துக்கள் அளபு எடுக்கா. நெடிலுக்கு இரண்டு மாத்திரை. செய்யுளில் இரண்டு மாத்திரை உடைய நெடில், மூன்று அல்லது நான்கு மாத்திரை அளவு மிக்கு ஒலிக்க வேண்டினால், அம்மாத்திரைகளுக்குரிய இன எழுத்துக்களைச் சேர்த்து எழுதவேண்டும்.

(எ-டு) 'ஆ' - நெட்டெழுத்து. இது இரண்டு மாத்திரையின் மிக்கு ஒலிக்க, 'ஆஅ' என்று எழுத வேண்டும் இப்போது ஆ - இரண்டு மாத்திரை; அ - ஒரு மாத்திரை; இரண்டும் சேர்ந்து மூன்று மாத்திரை ஒலிக்கும். இவ்வாறே பிற நெடில்களுக்கும் கண்டு கொள்க.

ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ. இவ்வாறு ஏழு நெடில்களுக்கும் அவற்றின் இனமாகிய குறில்கள் வரும். மேல் எல்லை நான்கு மாத்திரை வரை எழுப்பலாம்.

### *சூத்திரம் 7* (மாத்திரை)

*கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை*
*நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே.*

**(ப-ரை)**

கண் இமை நொடி என - கண் இமைத்தலும், கை நொடித்தலும் (சுடக்குவிடுதல்) ஆகிய, அவ்வே - அவ்இரண்டே, மாத்திரை - மாத்திரை என்பதற்குரிய அளவுகோல்கள், நுண்ணிதில் உணர்ந்தோர் - இது நுண்ணறிவுடையோர், கண்ட ஆறு - கண்ட முறையாகும்.

கண்ணை இயல்பாக இமைத்தலுக்கும், கையை இயல்பாக நொடித்தலுக்கும் உரிய கால அளவே ஒரு மாத்திரைக்குரிய கால அளவாகும். (நொடித்தல் - பெருவிரலையும் நடுவிரலையும் சேர்த்து ஒலி எழுப்பல்)

### *சூத்திரம் 8* (உயிர் எழுத்துக்கள்)

*ஔகார இறுவாய்ப்*
*பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப.*

**(ப-ரை)**

ஔகார இறுவாய் - ஔ என்னும் நெட்டெழுத்தினை ஈற்றிலே

பெற்று முடியும், பன்னீரெழுத்தும் - பன்னிரண்டு எழுத்துக்களும், உயிர் என - உயிர் எழுத்துக்கள் என்று, மொழிப - அறிஞர் கூறுவர்.

'அ' தொடங்கி 'ஔ' முடிய உள்ள 12 எழுத்துக்களும் உயிர் எழுத்துக்களாம்.

(எ.டு.) அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ - ஆகிய 12 எழுத்துக்களும் உயிர் எழுத்துக்கள்.

## சூத்திரம் 9 (மெய்யெழுத்துக்கள்)

*னகார இறுவாய்ப்*
*பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப.*

'ன்' என்ற எழுத்தை ஈற்றிலே கொண்டு முடியும் 18 புள்ளி எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களாம். அவை, க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன். - இவ்வாறு புள்ளி பெற்றுவரும் 18 எழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள். புள்ளிஎழுத்து, மெய்யெழுத்து, ஒற்றெழுத்து, உடம்பெழுத்து ஆகிய இவை எல்லாம் ஒரே பொருளை உடையன. (இறுவாய் - கடைசியில்)

## சூத்திரம் 10 (உயிர்மெய் எழுத்துக்கு மாத்திரை)

*மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா*

(ப-ரை)

உயிர் - உயிரெழுத்துப் பன்னிரண்டும், மெய்யோடு இயையினும் - பதினெட்டு மெய்யெழுத்துக்களோடு கூடி நின்றாலும், இயல் திரியா - தம் அளவும் குறியும் எண்ணும் வேறுபடாமல் ஒத்திருக்கும் என்பதாம்.

'அ' என்னும் உயிரெழுத்து, 'க்' என்னும் மெய்யெழுத்தோடு சேர்ந்து (க்+அ) 'க' என நின்றாலும் 'அ' என்னும் உயிரெழுத்து தனது ஒரு மாத்திரையில் குன்றாமலும் ஒன்று என்னும் எண்ணை விடாமலும் நிற்கும். அஃதாவது,

'க்' மெய்; அரைமாத்திரை; 'அ' - உயிர்க்குறில் ஒரு மாத்திரை; க்+அ=க. இங்குக் 'க' என்பதும் ஒரு மாத்திரையே; ஒன்றரை மாத்திரை ஆகாது. மெய்யின் மேல் ஏறிய உயிரின் அளவே, உயிர்மெய்க்கும் அளவு என அறிக. இஃது எவ்வாறு என்றால், அரை நாழி உப்பில் ஒரு நாழி தண்ணீரை ஊற்றினால், கரைந்த உப்புநீர் 1½ நாழி ஆகாது; ஒரு நாழியே ஆகும். அதுபோல, உயிரின் அளவே உயிர்மெய்க்கும் உரியது.

(தொடரும்...)

# நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | **சிதம்பர ரகசியம்** (கன்னட நாவல்) |
| மூல நாவலாசிரியர் | : | **கே.பி. பூரணச் சந்திர தேஜஸ்வி** |
| தமிழ் மொழிபெயர்ப்பு | : | ப. கிருஷ்ணசாமி (பெங்களூர்) |
| வெளியீடு | : | சாகித்திய அக்காதெமி,<br>புதுடெல்லி. |
| விலை | : | ரூ.90/- |

கே.பி. பூரணச்சந்திர தேஜஸ்வி கன்னட இலக்கிய உலகில் முன்னிறுத்திச் சுட்டக் கூடியவர்களுள் ஒருவர். கவிதை, நாடகம், சிறுகதை, நாவல் என்று அனைத்து இலக்கிய வகைமை வளர்ச்சியிலும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். இவருடைய 'சிதம்பர ரகசியம்' (1985) என்னும் நாவல், சாகித்திய அக்காதெமியின் பரிசு பெற்றிருப்பது இவரின் எழுத்துலகிற்குக் கிடைத்த மணியாரமாகும்.

கன்னட இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், விவசாயத் தொழிலிலுள்ள முழுஈடுபாடு காரணமாகப் புதிய நோக்கில் உலகியலை அணுகியுள்ளார். சுற்றுச்சூழல், இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவுநிலை ஆகிய சிந்தனைகளின் தாக்கங்கள் ஏற்படுத்திய பாதிப்பு, 'சிதம்பர ரகசியமாக' மலர்ந்துள்ளது.

இந்நாவல் கன்னட நாட்டு 'கெசரூர்' என்னும் மலைக்கிராமத்து மக்களின் வாழ்வை மையமாகக் கொண்டுள்ளது. ஆழ்ந்து, ஆராய்ந்து, தேடிச் சென்று புற்றரிசியைச் சேகரிக்கும் எயினர்களைப் போல் நாவலாசிரியர் செசரூர் மக்களின் வாழ்க்கையின் பல படிநிலைகளைச் சுற்றிக் கதை அமைத்துள்ளார். சுற்றுச்சூழல், சாதி சமய மற்றும் அரசியல் சுரண்டல் தன்மை, லம்பாடி இனமக்களின் வரவால் ஏற்படும் பண்பாட்டுக் கலப்புத் தன்மை (Acculturation), மாணவப் பருவத்தினரின் உணர்ச்சிவயப்பட்ட மனநிலை, மக்களுடைய பேய், பிசாசு, மந்திரித்தல் தொடர்பான மூட நம்பிக்கைகள், கயமைத்தன்மை ஆகியவற்றோடு பாமரத்தன்மை என ஒவ்வொரு கோணத்தையும் இக்கதையின் வாயிலாக வெளிக்காட்டியுள்ளார்

நவமணிகளைக் கோக்கப் பயன்படும் நூலிழை போலச் சமூகத்தின் பல்வேறு பிரச்சனைகளிடையே காதல் நாவலில் ஊடுபொருளாக அமைந்துள்ளதும், அதனை எதிர்கொள்ளும் நிலையின் நுட்பங்களும் வாழ்வியல் களமாகியுள்ளன.

வாழ்வின் உண்மைப் பொருளை உணர்ந்து கொண்டால் வாழ்க்கை வாழ்வதற்கே என்று குறிப்பு மொழியாகக் கூறிக் கதையை முடிப்பது படைப்பின் பெருமையினை நிலைபெறச் செய்யும் காலப்பெட்டகமாகும்.

சமூகமாற்றத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதமாகிய படைப்பானது, சார்புடைய மக்களைச் சென்றடைந்து விழிப்புணர்ச்சிக்குக் கால்கோளினால் படைப்பாளிக்கு வெற்றி. சமூக எழுச்சிப் பணிக்குச் சாகித்திய அக்காதெமி புகழாரம் சூட்டியுள்ளது. இந்நாவலைப் பெங்களூர் தமிழாசிரியரும், படைப்பாளியும், திறனாய்வாளருமான ப.கிருஷ்ணசாமி புத்தாயிரத்தின் புதுவரவாகத் தமிழில் பெயர்த்துள்ளார். மொழிநடையும், சொல்லாட்சியும், அவர்தம் படைப்பாக்கத் திறனும் சொந்த தேசத்து விளைச்சலாக வாசிப்புக்கு வழித்துணையாகியுள்ளன.

**– திருமதி.மு. மீனா.**

## நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **நவீன தமிழ்ச் சிறுகதைகள்** |
| தொகுப்பாசிரியர் | : | **சா.கந்தசாமி** |
| வெளியீடு | : | சாகித்திய அக்காதெமி<br>இரவீந்திர பவன்<br>35, பெரோஸ்ஷா சாலை,<br>புதுதில்லி - 110 001 |
| விலை | : | ரூ.120/- |

புத்தாயிரம் ஆண்டின் முதல் வெளியீடாக 'நவீன தமிழ்ச் சிறுகதைகள்' அமைந்துள்ளது. 'சாயாவனம்' நாவல் மூலமாக இலக்கிய உலகிற்கு அறிமுகமான சா.கந்தசாமி இந்நூலின் தொகுப்பாசிரியர். இத்தொகுப்பில் முப்பத்தைந்து சிறுகதைகள் தொகுக்கப் பட்டுள்ளன. சிறுகதைகளின் படைப்பாளர்களைப் பற்றிய செய்திகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளமை பயனுள்ளது. சிறப்பானது.

பழஞ்சிறப்புமிக்க தமிழிலக்கிய வரலாற்றில் சிறுகதையின் தோற்றம் ஒரு நாற்றாண்டுக் கால அண்மையது. காலப்பகுப்பு மட்டுமின்றி, அக்கால மக்கள் வாழ்வின் செய்திகளையும் சிறுகதைகள் யதார்த்தப்போக்கில் வழங்குகின்றன. இதன்வழி சிறுகதைகள் நவீனம் என்ற அடைபெறுகிறது என்பதை அறியமுடிகிறது.

இந்நவீன சிறுகதைத் தொகுப்பிலுள்ள முப்பத்தைந்து சிறுகதைகளையும் படித்து முடிக்கின்றபோது சிலபோது வியப்பாகவும், சில நேரங்களில் மனவருத்தமடையுமாறும் உள்ளன. படைப்பாளர்களின் கற்பனை கலந்ததாயினும், சமூகத்தில் வறுமை, மடமை போன்ற சில நிகழ்வுகள் இன்னும் மாறாமலிருக்கக் கூடிய நிலை அறியக் கிடக்கிறது. நாம் வாழும் புள்ளியைச் சுற்றியுள்ள சமூக வட்டம் எவ்வாறுள்ளது என்பதை நாம் அனுமானிக்க மிகவும் பயன்படக்கூடிய நூலாகும்.

**- கா. மனோகரன்.**

# கலைஞர் தமிழ்

நூல் மதிப்புரை

| | |
|---|---|
| நூலின் பெயர் | கலைஞர் தமிழ் |
| ஆசிரியர் | முனைவர் இரா. மோகன் |
| வெளியீடு | மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108 |
| விலை | ரூ.35.00 |
| கிடைக்கும் இடம் | 12B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001 |
| பக்கம் | 190 |

முனைவர் மோகனால் தொகுத்தும் வகுத்தும் படைக்கப்பட்டுள்ள கலைஞர் தமிழ் என்னும் நூல் திறனாய்வுத் துறையில் இணையற்றது எனல் மிகையாகாது. வாழ்க்கை வரலாறுகள் எழுதுவதிலும், திறனாய்வு நிகழ்த்துவதிலும் வல்லவ்ரான திரு.மோகன் தமிழறிஞர்களின் பாராட்டுக்கு உரியவர். செம்பாகமான நடை, தூயதமிழ், கருத்துத் தெளிவு, எளிமை முதலியன இவரது இலக்கிய ஆழத்தைப் புலப்படுத்துகின்றன.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் தமிழுக்குச் செய்துள்ள - செய்துவரும் பணிகள் அமைப்பில் கலைஞர் ஒரு பல்கலைக் குரிசில், நாவலர், பாவலர்; புதுமை விருப்பினர்; தமிழுக்குப் பாதுகாவலர். இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழகத்திற்கு வாய்த்த - கிடைத்தற்குரிய கருவூலம் கருணாநிதி அவர்கள். சமூக இலக்கியம் தொடங்கி இக்காலக் கவிதை வரை அவர் தொடாத துறையே இல்லை எனலாம்.

முனைவர் மோகன் கலைஞரைப் பலமுனைகளில் படம் பிடித்துள்ளார். தக்க சமூகச் சான்றுகள் தரப்பட்டுள்ளன. தமிழறிந்த தமிழ்ப்பாதுகாவலர் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக வாய்த்திருப்பது தமிழ் அன்னையின் தவமே ஆகும். இனியொரு கம்பனும் வருவானோ? இப்படியும் கவி தருவானோ? என்று நாமக்கல் கவிஞர் பாடியது போன்று, இனியொரு முதல்வரும் வருவாரோ இப்படியும் தமிழ் தருவாரோ? என வியக்கத் தோன்றுகிறது. கலைஞரைப்பற்றிப் பாராட்டியோர் பலர். ஆயின் முனைவர் மோகன் படப்பிடிப்பு தனிச் சிறப்பு வாய்ந்தது. நூலைப் படிக்கும் போது ஏற்படும் உணர்வும் சுவையும் பன்முறையும் இதனைப் படிக்கத் தூண்டும். சுருங்கக்கூறின், பேரறிஞர் சாமுவேல் ஜான்சனுக்கு ஒரு பாஸ்வெல் கிடைத்தது போலவும், சேக்ஸ்பியருக்கு ஒரு பிராட்லி கிடைத்ததுபோலவும், மில்டனுக்கு ஒரு லூயி கிடைத்தது போலவும் கலைஞருக்கு ஒரு மோகன் கிடைத்துள்ளார் என்றே கூறிவிடலாம் போல் தோன்றுகிறது. இளம் தலைமுறையினரும், எழுத்தாளரும், ஆட்சியாளரும், அறிஞரும் படித்துப் பயன்பெறத்தக்க கருத்துக் கருவூலமாகத் திகழ்கிறது கலைஞர் தமிழ்.

-நா. பாலுசாமி

அன்பு அச்சகம், மதுரை ✆ 741116